Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 01 திங்கட்கிழமை (17.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 048

## ஹெல உறுமயவுடனான பேச்சு முடிவிற்கு வரவில்லை

### அமைச்சர் சுசில் தகவல்



(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவுடன் நடக்கும் பேச்சுவார்த்தைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.


தேவை ஏற்படும் பட்சத்தில் அந்தக் கட்சியுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசிலிருந்து விலகுவதற்கு 90 வீதமானோர் வலியுறுத்து

### என்கிறார் அத்துரலிய தேரர்



(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தில் இருந்து விலக வேண்டும் என அந்தக் கட்சியின் பிரதான செயற்பாட்டாளர்களில் 90 வீதமானோர் கூறியுள்ளதாக தூய்மையான நாளை அமைப்பின் ஏற்பாட்டாளரான நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சி நேற்று முன்தினம் கட்சியின் பிரதான செயற்பாட்டாளர்களை கொழும்புக்கு அழைத்து அரசாங்கத்தில் இருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

# கூட்டு பிழையாளிகளாக்குவதற்கு மக்களை இழுக்கிறார் சிவஞானம்

### அவரது அண்மைய அறிக்கை குறித்து கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பேற்று ஒரு வருடம் முடிவடைந்துவிட்டது. இந்த நிலையில் வடமாகாணத்தின் சூழலையும், வளங்களையும், வாழ்வியலையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதனையே அண்மையில் வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவர் சிவஞானம் விடுத்துள்ள அறிக்கை வெளிப்படுத்துவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பேரவைத் தலைவரின் அண்மைய அறிக்கையில், தாயகத்தில் இருக்கக்கூடிய உற்பத்தி சார் வளங்களை இனம் கண்டு அவற்றைக் கொண்டு உருவாக்கக்கூடிய தொழில்களையும் இனம் கண்டு திட்டங்களைத் தயாரித்து வழங்கியுதவ வேண்டுமென நிலத்திலும் புலத்திலும் வாழுகின்ற துறைசார் அறிவு அனுபவம் மற்றும் ஆற்றல்களைக் கொண்ட உறவுகளை வடக்கு மாகாண சபை வேண்டியுள்ளது. என்று கூறியுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளது.

மேலும் வடக்கு மாகாண சபை தனித்து நின்று திட்டங்களை தயார்படுத்தலாம் என்றோ அமுல்படுத்தலாம் என்றோ நாம் கருதவில்லை. மாறாக எமது உறவுகளின் உதவியுடனும் ஒத்துழைப்புடனேயும் எமது மக்களின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என திடமாக நம்புகிறது என்றும் கூறியுள்ளார்.

இப்படி ஒரு அறிவிப்பை மாகாண சபையை பொறுப்பேற்ற முதல்வாரத்தில் கூறியிருந்தால் அதை வரவேற்றிருக்கலாம். அதைவிடுத்து ஒரு வருட காலத்தை ஊதாரித் தீர்மானங்கள் நிறைவேற்றி வீண் விரயமாக்கிவிட்டு, மாகாண சபைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## பொய்க் குற்றச்சாட்டை முன்வைக்கிறார் ஜனாதிபதி

### விசனம் தெரிவிக்கும் சொல்ஹெய்ம்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது கடந்தகால செயற்பாடு தொடர்பாக பொய்யான தகவல்களை தெரிவித்துள்ளதாக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிட்டரில் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எனது செயற்பாடுகள் தொடர்பாக பொய்யான" தகவல்களை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான உண்மைத்

19 ஆம் பக்கம் பார்க்க



மாதகல், சம்பில்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான 81 கிலோ கஞ்சாவுடன் இளவாலை பொலிஸார் நிற்பதைக் காணலாம். (25)


## விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு செயற்றிட்டம்

### அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விவசாயிகளை ஊக்குவிக்கவும் விவசாயச் செய்கைகளை மேம்படுத்தி அதனூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மணடபத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற மாவட்ட விவசாய சம்மேளனங்களின் வருடாந்த கலந்துரையாடலில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் அறிவிப்பின் பின்னரே பொது வேட்பாளர் வெளிவருவார்

### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிரகட்சிகள் சார்பில் முன்னிலைப் படுத்தப்படவுள்ள பொது வேட்பாளர் குறித்து, இந்தத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதன் பின்னரே அறிவிக்கப்படுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அடுத்த வருடம் நடைபெறும் என்று ஜனாதிபதியே கூறி வருகிறார்.

எனினும் இது உறுதியாகத் தெரிவாகவில்லை. தற்போது இந்தத் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்ற போது, தேர்தல் அறிவிப்பு

19 ஆம் பக்கம் பார்க்க



# வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், சரியானவர்களும் தேவையுடையோர்களும் இனம்காணப்பட்டு அவர்களுக்கு உதவிகள் கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும் என்பது மட்டுமல்லாது மக்களுக்குச் சரியான வழியைக்காட்டும் வழிகாட்டிகளாகவும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும்.


அத்துடன், ஊடகங்களில் வெளிவரும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் மற்றும் செய்திகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாட்டையும் நீங்கள் கொண்டிருந்தல் வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே அவர்களது பிரச்சினைகள், தேவைப்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

நேற்று யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், தெல்லிப்பளை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதன்போது ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, வாழ்வின் எழுச்சித் திட்ட மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ரகுநாதன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# வேலணையில் வீதி விபத்து; எட்டு வயது மாணவன் காயம்




வேலணையில் இடம்பெற்ற வீதி விபத்தில் பாடசாலை மாணவன் காயமடைந்துள்ளார். நேற்றுக் காலை 9.15 மணிக்கு வேலண்ண துறையூர் பிரதான வீதியில் முச்சக்கர வண்டி மோதிய தில் மாணவன் காயமடைந்து, வேலணை கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரசரத்தினம் அஜந்தன் (வயது-8) என்ற ஐயனார் வித்தியாலயத்தில் தரம்-3 இல் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

துரிதமாக செயற்பட்ட கிராம மக்கள் விபத்துக்குள்ளான மாணவனை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்தனர். ஸ்தலத்திற்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வீட்டிலிருந்து கடைக்கு வந்த மாணவனே விபத்துக்குள்ளானார். (21)

# அனலைதீவு பொது நூலகம் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(அனலைதீவு)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதம் ஒக்ரோபர் - 2014 மற்றும் தேசிய வாசிப்பு மாத பத்தாண்டு பூர்த்தி என்பவற்றை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**திருக்குறள் மனனம் - தரம் -1**

கு.கௌதம் (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), ர.மதுசியா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), க.கிசாயினி (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை).

**திருக்குறள் மனனம் - தரம் -2**

த.சகானா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), ர.டினோயா (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), கு. அபிசாயினி (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை).

**திருக்குறள் மனனம் - தரம் -3**

ஜெ.ஜெனார்த்திகா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), பி.அபிசாளினி (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), க.அபினயன் (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை).

**திருக்குறள் மனனம் - தரம் - 4, 5**

த.பிரியா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை), செ. விவேதினி (யா/அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), த. லக்சிகா (யா/அனலைதீவு வடலூர் அ.த.க.பாடசாலை).

**திருக்குறள் மனனம் - தரம் - 6, 7, 8**

த.தாட்சாயினி (யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்), செ.மதுசியா (யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்), த.துவாரகா (யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்).

**கவிதை - தரம் - 9, 10, 11**

ஸ்ரீ.மதுசாளினி (யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்), ச.சுவேதிகா (யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்), உ.துஸ்யந்தன் (யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்).

**குழு சஞ்சிகை ஆக்கம்**

'மலரும் மொட்டுக்களும்' - (தரம்-8) யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், 'அமுது' - (தரம்-7) யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், 'தளிர்' - (தரம்-8) யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்.

**பொது அறிவு - திறந்த பிரிவு**

உ.துஸ்யந்தன் - (6 ஆம் வட்டாரம், அனலைதீவு), ந.ராதிகா - (1ஆம் வட்டாரம், அனலைதீவு), ரா.சாத்விகா - (2 ஆம் வட்டாரம், அனலைதீவு).

**சிறந்த நூலக அங்கத்தவருக்கான பரிசு**

ச.மேனகன் - (1ஆம் வட்டாரம், அனலைதீவு), ச.சுவேதிகா- (1ஆம் வட்டாரம், அனலைதீவு), க.அனுசியா - (6ஆம் வட்டாரம், அனலைதீவு).


# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச சபையின் உப அலுவலகம் அனலைதீவில் நிமித்த அடிப்படையில் இரவுக் காவலாளியாக கடமையாற்றிய



## அமரர் செல்லையா பத்மராசா

15.11.2014 (சனிக்கிழமை) இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்,
உப தவிசாளர்,
உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்.

பிரதேசசபை,
ஊர்காவற்றுறை.

(C/3470)



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2581 திகதி 15-11-2014

ஆங்கில எழுத்து: A

வெற்றி எண்கள்: 02 37 50 64

போனஸ் இல: 32

ஜக்பொட் பரிசு ரூ. 18,426,500/-வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 205637 | 20/- | 4,112,740/- |
| 2 இல | 14758 | 100/- | 1,475,800/- |
| 3 இல | 305 | 1,000/- | 305,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8315 | 40/- | 332,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 577 | 1,000/- | 577,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,426,500/- | - |
| 1 இல + போனஸ் இல | 9837 | 100/- | 983,700/- |
| 2 இல + போனஸ் இல | 460 | 500/- | 230,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 430 | 200/- | 86,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 240348 | | 9,722,340/- |


ஊதா நிற டிக்கட்டுகள் 2014.11.19 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 18,988,125/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3587)

இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் சைவக் குருமார் அறப்பணி மன்றத்தால் நேற்று வறுமைக் கோட்டின் கீழ் வாழும் உயர்தரம் கற்கும் மாணவன் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்படுவதைக் காணலாம். (135)

# ஐயப்ப விரத மண்டப பூசை

(நயினாதீவு)

நயினாதீவு புலம் ஸ்ரீ மலையில் ஐய்யனார் ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஐயப்பனின் 18 ஆம் படி ஐயப்பவிரத மண்டல பூசை இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 60 நாட்கள் அபிஷேக ஆராதனைகளும் திருவிளக்குப் பூசையும் நடைபெறவுள்ளது. அத்துடன் வேலணை தெற்கு இலந்தவனம் புரணை புட்கலை ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயத்தில் ஐயப்பன் 18 படி ஐயப்பன் விரதம் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 60 நாட்கள் விசேட பூசை வழிபாடுகளும், பஜனைகளும் இடம்பெறவுள்ளன. (21)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3596)

# விசேட கல்விப் பிரிவினரின் ஆக்கத்திறன் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய விசேட கல்விப்பிரிவு நடாத்திய விசேட தேவையுடைய மாணவர்களின் சித்திர-ஆக்கத்திறன் கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை காலை கோப்பாய் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா கண்காட்சிக் கூடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எ.சற்குணராஜா, யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார், கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் எஸ்.ஞானப்பிரகாசம் ஆகியோர் ஆற்றியதுடன், வாழ்த்துரையை யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா நிகழ்த்தினார்.

நன்றியுரையை யாழ்.கல்வி வலய விசேட ஆசிரிய ஆலோசகர் செல்வி.நவரட்ணம் சந்திரிக்கா வழங்கினார்.

இதன்போது விசேட தேவையுடைய மாணவர்களிடையே நடாத்தப்பட்ட சித்திர-ஆக்கத்திறன் போட்டியின் போது உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் உட்பட பல்வேறு ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வலய மட்ட, சித்திர ஆக்கத் திறன் போட்டிகள்-2014 இல் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது.

இந்தக் கண்காட்சி நிகழ்வு விசேட தேவையுடைய மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் முகமாகவும், ஏனையோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டதாக கோப்பாய் மகாவித்தியாலய விசேட கல்வி ஆசிரியர் ஆர்.சிவபுத்திரன் தெரிவித்தார். (48)

# மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை வீதி புனரமைப்பு பணிகள் துரிதகதியில்

(மண்டைதீவு)

மண்டைதீவு கிராமிய வைத்தியசாலையின் முன்பாகவுள்ள வீதி புனரமைப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருந்து வந்தது. தற்சமயம் மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்து வைத்தியசாலை இயங்கி வரும் நிலையில் இவ்வீதியானது புனரமைக்கப்படாமல் இருந்தது. இதனால் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் மிகுந்த சிமரங்களை எதிர்நோக்கி வந்தனர். இந்நிலையிலேயே தற்சமயம் இவ்வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த சூழ்நிலையினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த இவ்வீதிக்கு கல்லிடப்பட்டு சல்லி போடப்பட்டு தார் ஊற்றி புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மேலும் தெரிய வருகிறது. (பா)

## விரிவுரையாளராக பதவியுயர்வு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் எஸ். பாலச்சந்திரமூர்த்தி கல்வித் திணைக்களத்தால் பதவி உயர்த்தப்பட்டு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். ஹாட்லிக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் பொருளாளராகப் பணியாற்றிய இவரின் இடத்திற்கு ஆசிரியர் எஸ். உதயமூர்த்தி அபிவிருத்திக் குழுவின் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டுள் ளார். (01)

# மயிலங்காடு வீதியின் புனரமைப்பு ஆரம்பம்

(சுன்னாகம்)

கொத்தியாவடி மயிலங்காடு வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொத்தியாவடி சந்தியில் இருந்து மயிலங்காடு ஊடான ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை வரையான இரண்டு கிலோ மீற்றர் நீளமான வீதியில் தற்போது புனரமைப்பு பணிக்கான ஆரம்ப கட்ட வேலைகள் இடம்பெற்று வருவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் இவ்வீதி மிகமோசமாக சேதமடைந்திருந்ததுடன் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலும் காணப்பட்டது. மேலும் புனரமைக்கப்படாத குறித்த வீதி தொடர்பிலும் மக்கள் எதிர் நோக்கும் சிரமங்கள் குறித்தும் தினமுரசு சுட்டிக்காட்டியிருந்தது.

எனினும் தற்போது இவ்வீதி புனரமைக்கப்படுவதால் இனிவரும் காலங்களில் சிரமமற்ற இலகுவான போக்குவரத்தை மேற்கொள்ள வழி ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (66)

# மக்கள் நடுத் தெருவில் அரச நிதியோ அழிப்பவர்கள் சட்டைப் பையில்....




வடக்கு மாகாண சபையின் நிதி திரும்பிப்போகப் போகிறது என்ற சேதி இன்று பூதாகரமான பிரச்சினையாக மாறியுள்ளது.

பத்திரிகைகளும், மக்களும் இதைப் பற்றி கேள்வி எழுப்பி வருவதால், எதிர்க்கட்சியான ஈ.பி.டி.பி மாகாண சபையைப் பற்றி அக்குவேறு ஆணிவேறாக மக்களுக்கு விளக்கம் அளித்து வருவதால், எதையாவது செய்து இந்தக் காசைச் செலவழிக்க வேண்டும் என்ற நிலை மாகாண சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், ரஜினியின் அருணாசலம் பட்பாணியில் இரண்டு மாதங்களில் எல்லாக் காசையும் செலவழிப்போம் என்று இறங்கியிருக்கின்றார்கள் மாகாண சபை உறுப்பினர்கள்.

இப்படி அவசரப்பட்டுக் காசை செலவழிக்க முற்படும்போதுதான் ஏராளம் பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன.

அவசரமாகத் தீட்டப்படும் திட்டங்கள் அடிப்படைகளைத் தகர்த்துவிடுகின்றன.

இதனால், உரிய முறையிலான மதிப்பீடுகள் இல்லாமல், தேவை பற்றிய பகுப்பாய்வுகள் செய்யப்படாமல், நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரையில் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

கல்வி, சுகாதாரம், விவசாயம், உள்ளூராட்சி, கூட்டுறவு என்று பல துறைகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் இந்த தாராள முறைகேடுகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த துறைகளில் மேற்கொள்ளப்படும் வேலைகளைப் பற்றியோ அல்லது இந்த வேலைகளில் நடைபெறும் முறைகேடுகளைப் பற்றியோ யாரும் கேள்வி கேட்க முடியாது. அப்படி எவராவது கேள்விகளைக் கேட்டால் குறிப்பாக பொதுமக்களோ அல்லது திட்டங்களை மேற்கொள்ளும் நிறுவனங்களைச் சேர்ந்தோரோ விளக்கங்களைக் கேட்டால் அவர்கள் மாகாண சபையாலும், திட்டங்களை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்தோராலும் அச்சுறுத்தப்படுகின்றார்கள்.

எப்படியென்றால், உங்களுக்கு இந்த திட்டத்தை நாம் கொண்டு வந்துள்ளோம். இந்த திட்டத்திற்காக எவ்வளவோ பாடுபட்டு இந்த நிதியை ஒதுக்கியுள்ளோம். இப்போது நீங்கள் எங்களைப் பார்த்து கேள்வியா கேக்கிறீர்கள்? என்று மிரட்டுகிறார்கள்.

உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மகாவித்தியாலயம் ஒன்றுக்கு ஒரு கட்டடத்திற்கான நிதியை இந்த அதிரடி – அவசரத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறது மாகாண சபை.

ஆனால், சம்பந்தப்பட்ட பாடசாலையில் கட்டப்படும் கட்டடம் புதிய கட்டடம் அல்ல, புதிய கட்டடத்திற்கே நிதி ஒதுக்கப்பட்டது.

ஆனால், இங்கே நடப்பது என்னவென்றால், ஏற்கனவே சிதைவடைந்த நிலையில் இருந்த கட்டடத்தை புனரமைக்கும் பணியே நடக்கிறது.

ஒதுக்கப்பட்ட நிதியானது எவ்வளவு என்றோ, என்ன மாதிரியான கட்டடம் என்றோ, எந்த அடிப்படையில் இந்தக் கட்டடம் கட்டப்படுகின்றது என்றோ சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபருக்கும் தெரியாது. அந்த பாடசாலை சமூகத்தினருக்கும் தெரியாது.

இதைப் பற்றி அதிபரோ அல்லது பாடசாலை சமூகத்தினரோ கேள்வி கேட்பதற்கும் விளக்கம் கோருவதற்கும் பயப்படுகிறார்கள்.

அப்படிக் கேள்வி கேட்டால் அல்லது விளக்கத்தைக் கோரினால் இந்த திட்டம் இடைநிறுத்தப்படும், கட்டடம் பறிபோய்விடும் என்று பயப்படுகிறார்கள். இது எவ்வளவு கொடுமையானது.

ஒரு திட்டத்தைப் பற்றி அறிவதற்கும் அதைப் பற்றி மேலதிக விளக்கங்களைப் பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஏனென்றால், அனைத்து திட்டங்களும் மக்களுக்கானவையே. – அப்படியென்றால், அந்தத் திட்டங்களைப் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

ஆனால், மாகாண சபை நிர்வாகம் அதைச் செய்யவுமில்லை. அதைச் செய்வதற்கு தயாராகவுமில்லை. இதுதான் இவர்களின் பிரச்சினை.

மூடப்பட்ட நிலையில் உள்ள திட்டங்களுக்குள்ளே மோசடிகளும், ஊழல்களும் தாராள–மாக இருக்கும் என்பதை சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை.

மேலே சொல்லப்பட்டுள்ள பாடசாலைக் கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பற்றி அந்தக் கட்டடத்தின் பயனை அடைபவர்களுக்கு தெரியவில்லை என்றால் அங்கே ஊழல்களும், மோசடிகளும் நடக்கிறது என்றுதானே அர்த்தம்.

இதுபோலவே அவசர நிதியொதுக்கீடில் அவரவர் தாராளமாக கைவைக்கிறார்கள் – மடியை நிறைக்கிறார்கள்.

மாகாண சபையின் நிதி செலவழிக்கப்பட்டாலும் பிரச்சினை. செலவழிக்கப்படாமல் விட்டாலும் பிரச்சினை என்ற நிலையில்தான் உள்ளது.

இப்படித்தான் உள்ளது வடக்கு மாகாண சபையின் இராஜாங்கம்.

நம்பி வாக்களித்த மக்கள் நடுத் தெருவில்

அரசாங்கம் ஒதுக்கிய நிதியோ அழிப்பவர்கள் சட்டைப் பையில்.

தொழில் எவ்வளவு கீழ்த்தரமாக இருந்தாலும் பரவாயில்லை, சோம்பேறியாக இருப்பதுதான் அவமானம். - டால்ஸ்டாய்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அடவு கட்டி ஆட்டம் ஆரம்பம்!

தமிழ்நாடு சென்றிருக்கும் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அங்கு கூட்டத்தில் உரையாற்றும்போது, வடக்கில் ஒன்றரை லட்சம் படையினர் இப்போதும் நிலைகொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். பின்னர் தொலைக்காட்சிச் செவ்வியிலும் இந்தத் தொகையையே அழுத்திச் சொல்லியிருக்கிறார்.

போர் நடந்த சமயத்தில்தான் அவ்வளவு தொகை இராணுவம் இருந்ததாகவும், பல முகாம்களும் சோதனைச் சாவடிகளும் அகற்றப்பட்ட பின் வடக்கில் தற்போது சற்றேறக்குறைய நாற்பதினாயிரம் படையினரே உள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

யாழ்ப்பாணம் வந்துசென்ற ஐ.நா அதிகாரிகளும் யுத்தத்திற்குப் பின்பான படைக்குறைப்பில் அரசாங்கம் திருப்திகரமாகச் செயற்பட்டிருப்பதாகவே அறிக்கையிட்டிருக்கிறார்கள்.

இவ்வாறிருக்கையில் வடக்கு முதலமைச்சர் அந்த ஒன்றரை லட்சம் எண்ணிக்கையை எங்கிருந்து எப்படிப் பெற்றார் என்பதைக் குறிப்பிடவில்லை. இலங்கைக்கு வெளியே உள்ளவர்கள் பொருட்படுத்திச் செவிமடுக்க வேண்டுமென்றால், பெரிய தொகை ஒன்றைச் சொன்னால்தான் ஆச்சரியப்பட்டுக் கேட்பார்கள் என்று கருதிச் சொன்னதாகவே தெரிகிறது.

வடக்கில் நாற்பதினாயிரம் படையினர் இருப்பதாகச் சொன்னால், யுத்தம் நடந்த பூமியில் பாதுகாப்புக்காக அவ்வளவு பேரையேனும் வைத்திருக்க வேண்டியது அவசியம்தானே என்று சொல்லிவிடுவார்கள் என்பதால்தான் முதலமைச்சரின் அந்த மிகைப்படுத்தல்.

வடக்கிலுள்ள படையினரின் உண்மையான எண்ணிக்கையை ஆதாரபூர்வமாக அறிந்து சொல்வதற்கு அக்கறையெடுக்க வேண்டுமென்று வடக்கின் முதலமைச்சர் ஏன் எண்ணவில்லை? அவர்கள் உணர்ச்சிகரப் பொய்களால் இட்டுக்கட்டிச் செய்துகொண்டிருக்கும் அரசியலுக்கு அது உதவாது.

இனப்பிரச்சினையில் எந்தத் துரும்பையும் அசைத்துவிடாமல், அவர்களின் பதவிகளை குறியாகக் கொண்ட அரசியலைச் செய்வதற்கு, ஒன்றரை லட்சம் படையினர் வடக்கில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதுதான் அவர்களது எதிர்பார்ப்பு.

அதுபோலத்தான் சிங்களக் குடியேற்றங்கள் நடந்துகொண்டிருக்க வேண்டும், மக்களின் காணிகள் திரும்ப வழங்கப்பட்டு விடாமலிருக்க வேண்டும், மக்களுக்கு அபிவிருத்திகள் எதுவும் நடந்து விடாமலிருக்க வேண்டும் என்பதெல்லாம்தான் இவர்களது அந்தரங்க விருப்பம்.

அப்போதுதான் எதிர்ப்பரசியலை ஜோராகச் செய்துகொண்டிருக்கலாம். இலங்கை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எந்த அரசாங்கங்களுடனுமோ சிங்கள சமூகத்துடனோ பேசிப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று சொல்லிக்கொண்டே தாங்கள் பதவிகளைப் பிடித்துக் கொண்டிருக்க முடியும்.

அதேபோல, இலங்கையில் ஆட்சிக்கு வரவேண்டியது, தாங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்க வாகான அரசாங்கமாகவே இருக்க வேண்டும் என்பதையும் திட்டமிட்டு நடந்துகொள்கிறார்கள்.

இல்லாவிட்டால், போர்க்குற்ற விசாரணையில் மகிந்த அரசைக் கவிழ்த்துவிட்டால் தமிழர்களுக்குத் தீர்வு வந்துவிடும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள், இப்போது ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிக்கு எங்கள் ஆதரவு இல்லை என்று நழுவுவது ஏன்?

“ஜனாதிபதி வேட்பாளர் எவராவது எங்கள் மூன்று கேள்விகளுக்கு வழங்கும் பதிலை வைத்துத்தான் தமிழர் வாக்குகள் கிடைக்கும்” என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன். இந்த அந்தர்பல்டி எதற்காக? பெரும்பாலான தமிழர்கள் வாக்களிக்காமல் விடட்டும் என்பதற்குத்தானே?

தமிழ் வாக்களிப்பு மந்தமாகிவிட்டால், ஜனாதிபதி மகிந்தவின் வெற்றிவாய்ப்பு மேலும் உறுதிப்பட்டு விடுமல்லவா! இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தந்திரம்! மீண்டும் மகிந்த வந்தால்தான், இவர்கள் மாறாமல் அதே தங்கள் எதிர்ப்பரசியலைச் செய்தபடி காலத்தை இழுத்துச் செல்லலாம்.

எனவே, அதற்கான ஆட்டங்களை அதே பழைய அடவுகளுடன் நிகழ்த்துகிறார்கள். அரச எதிர்ப்பை முழங்கியே அடுத்த பொதுத்தேர்தலில் வெல்ல வேண்டுமல்லவா?

- ஆசிரியர்



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2014

“மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்”
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்
மனிதன் மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா...ஒவ்வொரு மரமும் போதிமரம்!

—— கவிஞர் வைரமுத்து

# ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி

# கண்டியில் பொன்சேகா சூளுரை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய ஊழல ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதற்கு தனது கட்சியினர் முன்னிற்பார்கள் என்று சரத் பொன்சேகா சூளுரைத்துள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, நேற்று முன்தினம் தனது கட்சி முக்கியஸ்தர்களுடன் கண்டிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டபின் அவர் ஊடகவியலாளர்க்ளைச் சந்தித்தார். அப்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சரத் பொன்சேகா,

கடந்த முறை போன்று இம்முறையும் பொது அபேட்சகர் ஒருவரை முன்னிறுத்தினால் மட்டுமே இந்த ஊழல் ஆட்சியாளர்களை விரட்டியடிக்க முடியும். அதற்கான முயற்சியில் எனது கட்சி முன்னிற்கும் என்று தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவுடன் அவரது மனைவி அனோமா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெடகொட, மாகாண சபை உறுப்பினர் சுசில் கிந்தெல்பிடிய ஆகியோரும் குறித்த விஜயத்தின் போது உடனிருந்தனர்.

## இன்று பரிசளிப்பு விழா

கைதடி சேதுகாவலர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மாவடிக் கந்தன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி இராசேஸ்வரி திருஞானசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கணக்காய்வுத் திணைக்கள உத்தியோகத்தர் வே.தயாளன், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப பணிப்பாளர், திருமதி கமலாம்பிகை ஸ்ரீதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

## சிறுமியின் சடலம் பாலாவியில் மீட்பு

பாலாவி வடக்கு கொடிகாமம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நேற்று சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

இப்பகுதியில் உள்ள தனது வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த ஒன்றரை வயதுடைய இராஜேந்திரன் கோபினா என்ற சிறுமி திடீரென காணாமற் போயிருந்தார். பின்னர் அங்குள்ள கிணற்றிலிருந்து அந்த சிறுமியின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (14)

# கண்டி சிறைச்சாலையில் கைதிகள் சிலருக்கு சலுகை

## பொறுப்பதிகாரியின் பாரபட்சம்

கண்டி, தும்பர சிறைச்சாலையில் உள்ள எட்டு முக்கிய குற்றவாளிகளுக்கு நாளாந்தம் கண்டியின் நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலிருந்து உணவு தருவிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புனர்வாழ்வு முகாம் ஒன்றுக்குப் பொறுப்பாக இருந்த ஒருவர் அண்மையில் தும்பறை சிறைச்சாலைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த அதிகாரியின் வருகையின் பின்னர் பணக்கார கைதிகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

வற் வரி மற்றும் சுங்கத்தீர்வை மோசடிகளில் ஈடுபட்டு சிறைவாசம் அனுபவிக்கும் எட்டு குற்றவாளிகளுக்கு நட்சத்திர ஹோட்டல்களிலிருந்து உணவுகளை தருவித்துக்கொடுக்கவும் அவர் ஏற்பாடு செய்துள்ளார். அவர்களில் சிலர் 20 முதல் 60 வரையான வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

அவர்களுடன் கடுமையான குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ள மேலும் சில கைதிகளும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் புதிய பொறுப்பதிகாரி இவ்வாறான கைதிகளிடமிருந்து கிடைக்கும் நிதி அன்பளிப்புகளுக்காக அவர்களுக்கு விசேட வரப்பிரசாதங்களை செய்து கொடுத்திருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

## அரிசி இறக்குமதிக்கு விசேட நடவடிக்கை

பங்களாதேஷிடம் இருந்து 50,000 மெற்றிக் தொன் அரிசியை, இலங்கை இறக்குமதி செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் அதிகரித்து வரும் விலையைக் கட்டுப்படுத்துதல் என்பனவே இதன் காரணம் என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசி நாடு பூராகவும் சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்பாறை, வவுனியா, பொலன்நறுவை, அம்பாந்தோட்டை உள்ளிட்ட பகுதிகளில் நிலவிய கடும் வறட்சி காரணமாக இலங்கையின் அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பணிப்பெண்கள் 41 பேர் நாடுதிரும்பினர்

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்று பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிய சில பெண்கள் நாடு திரும்பியுள்ளனர். நேற்று அதிகாலை 41 பணியாளர்கள் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

வெளிநாட்டுக்குச் சென்று இவர்கள் பல துன்புறுத்தல்களுக்கும் இலக்கானதாகக் கூறப்படுகின்றது. இவர்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

## தேர்தல் பிரசாரம் தயாராகிறார் நிமால்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாகவும் அமைச்சுப் பதவி தமக்குக் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், தேர்தலின் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட விருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தில் யாரும் அமைச்சுப் பதவிகளுக்காக செயற்படவில்லை. அரசாங்கம் தங்களை பாதுகாக்கிறது. தாங்கள் மக்களுக்காகவே அமைச்சுப் பதவிகளை வகிப்பதாக அவர் கூறியுள்ளார்.

# யுத்தப் பாதிப்பை சுமந்த வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு தமிழக, தென்னிலங்கை மீனவர்களால் இரட்டிப்பு பாதிப்பு



**(11-11-2014) பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பாராளுமன்றக் குழுக்களின் பிரதி தவிசாளர் முருகேசு சந்திரகுமார் ஆற்றிய உரை.**

**கௌரவ தவிசாளர் அவர்களே,**

எங்கள் பிரதேசங்களில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பானது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை தினமும் அழித்துக் கொண்டிருக்கின்றது. இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டும் கூட அதையும் தாண்டி அவர்கள் தொடர்ந்து இங்கு வந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த விடயத்தில் அரசு இன்னும் தீவிரமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை நான் இங்கு வலியுறுத்துகின்றேன்.

எங்களது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு உதவித்திட்டங்களை யுத்தத்திற்குப் பின்னரான கடந்த ஐந்து ஆண்டுகளாக அரசு வழங்கி வருகின்ற போதிலும் தங்களது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அவர்கள் போராட வேண்டிய சூழ்நிலை இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்டிருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவுக்குச் சென்று இந்தியத் தலைவர்களை - தமிழ் நாட்டுத் தலைவர்களை பல தடவை சந்தித்திருக்கிறார்கள். ஆனால், எங்களது வட பகுதி தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவது தொடர்பாக அவர்கள் இந்திய தரப்புகளிடம் குரல் கொடுப்பதாக தெரியவில்லை.

ஏன், இப்பொழுது கூட வட மாகாண முதலமைச்சர் தமிழ் நாட்டிலே இருக்கின்றார். தமிழக தலைவர்களிடம் எங்களது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவது தொடர்பாக அவர் பேசியதாக இதுவரை பத்திரிகைகளில் காணவில்லை. தமிழக தலைவர்களிடமும், தமிழக கடற்றொழிலாளர்களிடமும் எங்களது வாழ்வாதாரங்களை அழிப்பதை நிறுத்தும்படி அவர் மனிதாபிமான அடிப்படையில் கேட்டுக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக வட மாகாண சபை கடற்றொழில் அமைச்சர் டெனீஸ்வரன் இந்த விடயத்தில் ஒரு நல்ல நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார். இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை அண்மையில் அவர் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்ததையிட்டு நான் அவரை இந்த சந்தர்ப்பத்திலே பாராட்ட விரும்புகின்றேன். இந்த கொள்கையை - நிலைப்பாட்டை - ஒட்டுமொத்தமான தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற பிரதிநிதிகளும் கொண்டிருக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

நான் முக்கியமாக எங்களது கடற்றொழிலாளர்கள் தொடர்பான சில விடயங்களை கௌரவ அமைச்சரது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். ஏற்கனவே பலதடவைகள் நான் இந்த அவையிலும் உங்களிடம் நேரடியாகவும் குறிப்பிட்ட விடயத்தைத் தான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

Multi day boats அதாவது கடலிலே சென்று பல நாட்கள் தங்கி நின்று மீன்பிடிக்கக் கூடிய கலங்களைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் இன்னும் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் அவர்கள் அவ்வாறான கலங்களை நங்கூரமிடுவதற்குரிய துறைமுக வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

முதற்கட்டமாகக் குருநகரில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகத்தைப் புனரமைப்பதற்கு பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றீர்கள். அதற்கு நன்றி. அதேபோன்று வடமராட்சிக் கடற்பரப்பில் ஆழ்கடல் மீன்பிடிப்புக்காக குறிப்பாக பருத்தித்துறைப் பகுதியில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தைச் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு துறைமுகமாக நிர்மாணிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில், அப்பகுதியில் மிக அதிகமானோர் தங்களது வாழ்வாதாரத்திற்காகக் கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள்.

வல்வெட்டித்துறை, குருநகர் போன்ற பகுதிகளில் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடித் தொழிலைச் செய்த கடற்றொழிலாளர்களை அந்த இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இதை நான் வரவேற்கின்றேன். அவ்வாறானவர்களுக்கு மாற்று மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கு நீங்கள் உறுதியளித்திருந்தீர்கள். ஆனால், இதுவரை அவர்களுக்கு அவற்றை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, விரைவுபடுத்தி அவற்றை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அல்லது அவர்களது வாழ்வாதாரம் இப்போது மிகவும் கேள்விக்குறியாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கான நட்டஈட்டையாவது வழங்கிவைக்க வேண்டும்.

மேலும், புனரமைக்கப்படாமலிருக்கின்ற இறங்கு துறைகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளீர்கள். "கிளாலி" இறங்குதுறையை நானும் நீங்களும் சென்று நேரில் பார்வையிட்டிருக்கின்றோம். நீங்கள் அதனைப் புனரமைப்பதற்குரிய நடவடிக்கையை எடுப்பதாக அந்த மக்கள் மத்தியில் உறுதியளித்தீர்கள். ஆனால், இதுவரை இன்னும் அந்த இறங்குதுறையைப் புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதேநேரத்தில் புலோப்பளை கிழக்கு, வலைப்பாடு, இரணைமாதா நகர், நாச்சிக்குடா, பள்ளிக்குடா, கிராஞ்சி போன்ற கிளிநொச்சி மாவட்டப் பிரதேசத்திலுள்ள மீன்பிடித் துறைமுகங்களையும் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

கௌதாரி முனை, வலைப்பாடு, நாச்சிக்குடா, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் வெளிச்ச வீடுகளை அமைப்பதற்கும் நான் தங்களிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றேன். அவற்றையும் அமைத்துக் கொடுப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு, வன்னேரிக்குளம், அக்கராயன்குளம் போன்ற நன்னீர் நீர்நிலைகளில் நன்னீர் மீன் பிடிப்பதற்குரிய வசதிகளையும் அவர்களுக்குரிய உபகரணங்களையும் வழங்கவேண்டும். அத்துடன் இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன் பிடியில் ஈடுபடுபவர்களுக்கு அடிக்கடி தடைகள் போடப்பட்டு, அவர்கள் முழுப்பிரதேசத்திலும் மீன் பிடிப்பதற்குரிய அனுமதிகள் வழங்கப்படுவதில்லை. கடற்றொழிலாளர்கள் அதிகமாக வாழும் பூநகரிப் பிரதேசத்தில் ஒரு ஐஸ் தொழிற்சாலையை அமைப்பதற்கும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்துகின்றேன்.

அத்துடன் சட்டவிரோதமான மீன்பிடி தொடர்பாக உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். ஏனென்றால், யாழ் கடல் நீரேரியில் சட்டவிரோதமான வலைகளையும் உபகரணங்களையும் பயன்படுத்தி மீன்பிடிப்பது தொடர்பான விடயத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் இடையே கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அணுகுமுறைகள் வேறுபட்டதாகக் காணப்படுகின்றன. ஒரு மாவட்டத்தில் தடுக்கப்படுகின்றது. ஒரு மாவட்டத்தில் அது கண்டும் காணாது விடப்படுகின்றது. ஆகவே, நாடு முழுவதும் சட்டவிரோதமான செயற்பாடுகளுக்கு எதிராக ஒரே சட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய பணிப்புரைகளை அமைச்சர் வழங்கவேண்டும்.

**தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவுக்குச் சென்று இந்தியத் தலைவர்களை – தமிழ் நாட்டுத் தலைவர்களை பல தடவை சந்தித்திருக்கிறார்கள். ஆனால், எங்களது வட பகுதி தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவது தொடர்பாக அவர்கள் இந்திய தரப்புகளிடம் குரல் கொடுப்பதாக தெரியவில்லை. ஏன், இப்பொழுது கூட வட மாகாண முதலமைச்சர் தமிழ் நாட்டிலே இருக்கின்றார். தமிழகத் தலைவர்களிடம் எங்களது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவது தொடர்பாக அவர் பேசியதாக இதுவரை பத்திரிகைகளில் காணவில்லை.**

மண்ணெண்ணெய் மானியத்திற்குப் பதிலாக அவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள், வலைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேலும் விரைவாக விஸ்தரிக்க வேண்டும். சில கடற்றொழிலாளர்கள் மட்டுமே இதுவரை அவற்றைப் பெற்றிருக்கின்றார்கள்.

மேலும், பேப்பாரைப்பிட்டி என்ற முல்லைத்தீவு மாவட்டப் பிரதேசத்தில் வாழ்ந்து, தற்போது கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கல்லாறு என்ற பிரதேசத்திலே வாழும் 100 கடற்றொழிலாளர் குடும்பங்களின் நிலை தொடர்பாகவும் அவர்களது மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஏற்கனவே நான் நேரடியாக உங்களது கவனத்திற்கு கொண்டுவந்திருக்கின்றேன்.

அவர்கள் 2004ஆம் ஆண்டு சுனாமிக்கு முன்பு பேப்பாரைப்பிட்டி என்ற முல்லைத்தீவு மாவட்டப் பிரதேசத்தில் தான் தங்களது மீன்பிடித்தொழிலைச் செய்து வந்தார்கள். பிறகு சுனாமி வீட்டுத்திட்டத்துக்கு ஊடாக கல்லாறு என்ற கிளிநொச்சி மாவட்டப் பிரதேசத்துக்குள் நகர்த்தப்பட்டார்கள். இருந்தாலும் அவர்களின் கடற்கரை பேப்பாரைப் பிட்டியாகும்.

இப்பொழுது அவர்கள் கிட்டத்தட்ட 100 குடும்பங்கள் அங்கு தொழில் செய்ய முடியாது முல்லைத்தீவு நீரியல் வளத் திணைக்களத்தினால் தடுக்கப்பட்டுள்ளார்கள். ஏனென்றால் அவர்களுக்குரிய கடல் எல்லை முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்றது.

கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பான கூட்டத்தில் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் இது தொடர்பான கருத்துக்களை முன்வைத்துள்ளார். இந்தப் பிரச்சினைக்கு கௌரவ அமைச்சர் அவர்களும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் இணைந்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி அவர்கள் பணித்திருந்தார். இவ்விடயத்தில் விரைவாக தீர்வு காண வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்துகின்றேன்.

அத்துடன் இந்தப் பிரதேசங்களில் வெளி மாவட்டங்களிலிருந்து கடற்றொழிலாளர்கள் வந்து கடற்றொழில் செய்வது தடுக்கப்பட வேண்டும். சட்ட விரோதமாகச் சங்கு குளித்தல், அட்டை பிடித்தல் மற்றும் ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல் போன்ற நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள்.

கிட்டத்தட்ட கொக்கிளாயிலிருந்து கற்கோவளம் வரை பரந்த அந்தக் கடல்நீர்ப் பிரதேசத்திலே நூற்றுக் கணக்கானவர்கள் இவ்வாறு அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். இது தொடர்பாகவும் அமைச்சர் அவர்கள் உரிய கவனம் எடுக்க வேண்டும்.


நீண்ட யுத்தத்தின் பின்பு தற்பொழுது தான் கடற்றொழிலில் ஈடுபட்டுத் தங்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க முனையும் எங்களது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை இது சிதைப்பதாகவே அமைகின்றது. இதற்கு தொடர்ந்தும் அனுமதிக்கக்கூடாது.

கௌரவ அமைச்சர் அவர்களே! நான் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது என்னவென்றால், கொக்கிளாயிலிருந்து பருத்தித்துறை வரையான கடற் பிரதேசத்தில் எங்களுடைய கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையை நீங்கள் அங்கு நேரில் சென்று பார்வையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்பதாகும். நானும் உங்களுடன் வந்து அந்தப் பிரச்சினையை ஆராய்ந்து அந்த மக்களுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்குரிய துரித நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள்.

தென்னிலங்கை மீனவர்களின் இந்த அத்துமீறல்களுக்கும் இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்புகளால் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருப்பதால் எங்கள் மக்கள் இரட்டிப்பு வாழ்வாதார இழப்பை எதிர்கொள்கின்றார்கள். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். வடக்கின் எல்லா இடங்களிலும் கடற் பிரதேசங்களிலுள்ள வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. நீர்ப்பாசனத் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம் ஆகியன விவசாயப் பிரதேச வீதிகளைப் புனரமைப்பதுபோல கடற்றொழிலாளர்களின் நலன் கருதி குறித்த வீதிகளைப் புனரமைப்பதற்கு அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# இராஜதந்திர சேவையில் அவசரமான மீளாய்வு



(கொழும்பு)

கடல்கடந்த இராஜதந்திர சேவையில் மிக அவசியமான மீளாய்வு ஒன்றைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையமுடியாமைக்கான காரணங்களை அடையாளம் காண்பதே இந்த மீளாய்வு நடவடிக்கையின் பிரதான நோக்கமாகும்.

வெளிநாடுகளில் இருக்கும் கடல்கடந்த சேவை அதிகாரிகள் அனைவரும் நாளைமறுதினம் வெளியுறவு அமைச்சினால் கொழும்பில் உள்ள அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், திருப்தியற்ற முன்னேற்றங்கள் குறித்து இதன்போது விளக்கமளிக்கப்படவுள்ளதாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடக்கில் உள்ள ஒருவர், சாட்சியங்களை சேகரித்து ஐக்கிய நாடுகளின் ஜெனீவாவுக்கு அனுப்பியமை குறித்தும் அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் விசாரணை தகவல் சேகரிப்புக்களுக்கான காலம் முடிவடைந்த நிலையில் அதற்கு பின்னர் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றமை குறித்து அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தமது அதிருப்தியை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# பெண்கள் 8 பேருக்கு குளவி கொட்டியது

நுவரெலியா கந்தப்பளை பார்க் தோட்டத்தில் 8 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

பார்க் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த எட்டு பெண்களே குளவிக் கொட்டுக்கு நேற்று முன்தினம் மாலை இலக்காகியுள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான எட்டுப் பெண்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் நான்கு பேர் சிகிச்சைகளின் பின்னர் வெளியேறியுள்ள தாகவும் டொக்டர் அருண ஜெயசேகர கூறியுள்ளார்.

ஏனைய நான்கு பெண்களும் தொடர்ந்தும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# இந்திய முதலீட்டில் கொழும்பில் ஹோட்டல்

(கொழும்பு)

இந்திய ஹோட்டல் ஒன்றின் அதிககூடிய முதலீடு எதிர்வரும் 19ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது

கொழும்பு காலிமுகத்திடலில் ஐரிசி என்ற இந்த ஹோட்டல் மற்றும் குடியிருப்பு தொகுதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதன்போது அமைச்சர் பஷில் ராஜபக்ஷ மற்றும் ஐ.ரி.சி.யின் தலைவர் வை.சி. தேவசேகர் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இதுவே இந்தியாவுக்கு வெளியில் ஐ.ரி.சி. மேற்கொள்ளும் முதலாவது ஹோட்டல் திட்டமாகவுள்ளது. ஏற்கனவே ஐரிசிக்கு இந்தியாவின் பல இடங்களிலும் 100 ஹோட்டல்கள் செயற்பட்டு வருகின்றன.

ஐரிசியின் வருடாந்த வருமானம் 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

# தேர்தலை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்கள்




(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக தமது அமைப்பினால் 13 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவிருப்பதாக பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண எட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இந்த கண்காணிப்பு பணிகளுக்கு 35 சர்வதேச கண்காணிப்பாளர் களை இணைந்துக் கொள்ள விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். தற்போது ஜனாதிபதி தேர்தலை நடத்துவது குறித்து பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் தங்களின் கண்காணிப்பு ஏற்பாட்டு பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும்.

இதற்காக ஆசிய தேர்தல கண்காணிப்பு குழுவும் தங்களின் 35 பேர் அடங்கிய குழு ஒன்றை அனுப்பி வைக்க உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அலரி மாளிகை வாயிலில் குடும்பஸ்தர் உண்ணாவிரதம்



காணாமற் போன தனது மனைவியை மீட்டுத் தருமாறு கோரி அலரிமாளிகை முன்பாக ஒருவர் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளார்.

பாணந்துறையைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். இவரது மனைவி கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் காணாமற போயுள்ளார். சம்பவம தொடர்பில் அவர் வாதுவை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள போதிலும் பொலிஸார் அலட்சியம் காட்டுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

பின்னர் இது குறித்து பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகரிடம் முறையிட்டுள்ள நிலையில், தற்போது பொலிஸார் தன்னைத் துன்புறுத்தத் தொடங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த விடயத்தில் தலையிட்டு தனது மனைவியைத் தேடித்தர ஆவன செய்யுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தும் வகையில் தான் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள நபருடன் துணைக்கு அவரது சிறுவயதுக் குழந்தையொன்றும் நடைபாதையில் அமர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மும்முனைப் போட்டிக்கு வாய்ப்பு

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் தலைவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று விக்கிரமபாகு கருணாரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன, இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள விக்கிரமபாகு கருணாரத்ன, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி தவிர்க்க முடியாதது. ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி யினர் கூட்டிணைந்து ஒரு வேட்பாளரை தேர்தலில் களமிறக்குவார்கள்.



அதன் மூலம் அரசாங்கத்திற்கு சார்பாகவுள்ள இனவாத அடிப்படையிலான வாக்குகள் பிரிந்து செல்லும் வாய்ப்புக் காணப்படுவதால், எதிர்க்கட்சிகளுக்கு சாதகமான நிலை ஏற்படும்.

இந்நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க வேண்டும். அவரையே பொது வேட்பாளராக முன்னிறுத்தி, வெற்றி பெறச் செய்வதன் மூலம் இந்நாட்டில் அதிகாரப் பரவலாக்கலுக்கான வழி பிறக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வீதிபோக்குவரத்து விதிகள் பாடசாலை கல்வித்திட்டத்தில்

## தற்போது ஆராயப்படுகிறது

வீதி பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை பாடசாலை கல்வி விதானத்திற்குள் இணைத்துக் கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வீதி பாதுகாப்புக்கான தேசிய சபை குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து கல்வி அமைச்சருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக வீதி பாதுகாப்புக்கான தேசிய சபையின் தலைவர் காமினி ஏகநாயக்க தெரிவித்தார்.

வீதி விபத்துகளை குறைக்கும நோக்கில், பாடசாலை மட்டத்திலிருந்து வீதி போக்குவரத்து சட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் வீதி பாதுகாப்பு தொடர்பான சில கேள்விகளை உள்ளடக்குவது குறித்தும் கல்வி அமைச்சருடனான சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# அறிகுறி தென்பட்டால் அறிவிக்க வேண்டும்

## மலையக மக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படுவதற்கான சமிக்ஞைகள் தென பட்டால் உடனடியாக தங்களுக்கு அறிவிக்குமாறு கட்டிட ஆய்வு நிறுவகம் கோரியுள்ளது.

அந்த நிறுவகத்தின் மண்சரிவு அபாயங்கள் தொடர்பான ஆய்வாளர் ஆர்.எம்.எஸ். பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

மழையுடனான காலநிலை காரணமாக பல இடங்களில் திடீரென மண்சரிவு ஏற்படுவதற்கான அச்சம் காணப்படுகிறது.மண்சரிவு ஏற்படுவதற்கான அறிகுறிகளை முன்கூட்டியே அடையாளம் கண்டுக் கொள்ள முடியும்.இதன்படி மலைப்பாங்கான பகுதிகளில் வெடிப்புகள் ஏற்படலாம்.

கட்டிடங்களின் சுவர்களிலும் வெடிப்புகள் ஏற்படும்.இந்த வெடிப்புகள் தொடர்ந்து நீண்டு செல்லும்.மலைப்பாங்கான பகுதியில் உயர்ந்த நிலப்பரப்பில் காணப்படும் நீர் வற்றிக் போகும்.தாழ்வான நிலங்களில் புதிய நீர்நிலைகள் அல்லது சகதியுடன் கூடிய நீர் நிலைகள் உருவாகும்.மண்சரிவு ஏற்படக் கூடிய அச்சமுள்ள பிரதேசங்களின் மரங்கள் உள்ளிட்ட தாவரங்கள் வழமைக்கு மாறான அசைவுகளை வெளிப்படுத்தும்.

இவ்வாறான அறிகுறிகள் அவதானிக்கப்பட்டால், குறித்த பிரதேசத்தின் கிராம சேவகருக்கோ, அல்லது பிரதேச செயலாளருக்கோ அறிவிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நீதிமன்ற வியாக்கியானம் வெளியே கசிந்தது எப்படி?

## சட்டத்தரணிகள் சங்கம் கேள்வி

மகிந்த ராஜபக்ச மூன்றாவது தடவையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான உயர்நீதிமன்றத்தின் சட்ட விளக்கம் ஜனாதிபதியின் கைகளுக்கு கிடைக்கும் முன்னர் எவ்வாறு அரச ஊடகத்துக்கு தெரியவந்தது என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளது.

ஜனாதிபதிக்கு இந்த சட்டவிளக்கம் நவம்பர் 10ஆம் திகதியன்றே கிடைத்தது. எனினும் அதற்கு முன்னர் நவம்பர் 9ம் திகதியன்று அரச ஊடகம் இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து தகவல்களை வெளியிட்டது.

எனவே இந்த விடயத்தை சாதாரணமானதாக எடுத்துக் கொள்ள முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் உபுல் ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உயர்நீதிமன்றத்தில் எத்தனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன, எத்தனை எதிராக தாக்கல் செய்யப்பட்டன போன்ற விபரங்கள் 9ஆம் திகதியன்றே விளக்கமாக கூறப்பட்டன.

உயர்நீதிமன்றத்தில் சட்ட விளக்கம் பதிவாளருக்கு செல்லும் முன்னரே ஊடகத்துக்கு சென்றதை நிச்சயமாக உள்ளிருந்து கசிந்த விடயமாகவே கருதமுடியும்.

எனவே இந்த வரலாற்று தவறு தொடர்பில் உயர்நீதிமன்றம் இரகசிய பொலிஸாரிடம் விசாரணைக்கு உத்தரவிட்ட வேண்டும் என்றார்.




முல்லைத்தீவு பாரதி இல்ல சிறுவர்களின் சிறுவர் தின நிகழ்வுகள் பாரதி சிறுவர் இல்லக் கலையரங்கத்தில் இடம்பெற்றபோது முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசா நேர்ட்டோ நிறுவனத் தலைவர் செல்வராசா பத்மநாதன் ஆகியோர் பரிசு வழங்குவதையும் சிறுவர்களின் கலை நிகழ்வொன்றினையும் காணலாம். (63)

## புனரமைக்கப்பட்டு வரும் காட்டுப்புலம் வீதி

வடமாகாண சபையின் நிதி மூலம் வலி. மேற்கு பிரதேசத்தில் உள்ள காட்டுப்புலம் மாதகல் வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. நீண்டகால யுத்தத்தின் பின்னர் வலி. மேற்கு பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் காட்டுப்புல பிரதேசமும் ஒன்றாகும்.

குறித்த வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் தற்போது 6.5 மில்லியன் செலவில் திருத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை மாதகல் பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வலி.மேற்கு பிரதேச சபையால் இலவசமான முறையில் குடிநீர் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

## முரசின் இன்றைய பலன்



(17.11.2014 திங்கட்கிழமை)

ஐய வருஷம் கார்த்திகை மாதம் 01 ஆம் திகதி.
தசமி / சித்தம் கரிநாள்
பூரநட்சத்திரம் காலை 6.56 வரை பின் உத்தரம்
இராகு காலம் 07.38 - 9.08 வரை. சுபநேரம் 12.08 - 01.38 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | காரியக்கேடு ஏற்பட்டுவிடல் தடைப்பட்டிருந்த வெளியூர் பயணம் மேற்கொள்ள ஆயத்தமாதல். |
| ரிஷபம் | கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவதற்கு நண்பரிடம் கடன் பணம் பெறுதல். |
| மிதுனம் | விவாகத்தை நடாத்தும் முயற்சியில் இறங்குதல் குழந்தையைத் தத்தெடுக்க எண்ணுதல். |
| கடகம் | நோய் குறித்து அச்சமடைதல் பிரச்சினைகள் அதிகரிக்கும் |
| சிம்மம் | வியாபாரத்தைக் கைவிட எண்ணுதல் வெளியூர் பயணம் மேற்கொள்ளல் விபத்து ஏற்படல், அமைதிகெடல். |
| கன்னி | மீள்நியமனம் பெற பிரமுகர்களை நாடுதல் காலாவதியான ஆவணம் கண்டு பிழக்கப்பட்டதால் தண்டனை பெறல். |
| துலாம் | புதிய முயற்சியைக் கைவிட்டு விட உத்தேசம். காப்புறுதி இழப்பீட்டுத்தொகை கைக்கெட்டுதல் சுவீப் அதிர்ஷ்ட முண்டாதல். |
| விருச்சிகம் | சமாந்தரப்பிரயாணத்தினால் எச்சரிக்கை விடப்படல் மங்கள நிகழ்விற்கு நாட்குறித்தும் நடாத்த முடியாத நிலை. |
| தனுசு | கடன் கொடுப்தைக் குறைத்தல் முரண்படவந்தவருடன் பிரச்சினை விலகிவிடல். |
| மகரம் | ஏகாந்த நிலையைக்கைவிட்டு பிறருடன் பழக முற்படல் அடகுவைத்தபொருட்கள் ஏலம் போகும் நிலை எண்ணி கவலைப்படல். |
| கும்பம் | ஆயுதங்களுடன் கவனமாக பழகமுற்படுங்கள் விலங்குகளினால் பாதிப்பு ஏற்படல். |
| மீனம் | கடையில் கடனுக்கு உணவு வாங்குவதை தவிர்த்தல், மலத்தொற்று இருக்கலாம் என்று கடையைவிட்டு விலகிச்செல்லுதல் |

### பளை ஏ-9 வீதி பகுதியில்

# வெள்ளநீர்த்தேக்கத்தால் வியாபாரிகளுக்கு பொருட்சேதம்

### பிரதேச சபையின் அக்கறையின்மையே காரணம்

(யாழ்ப்பாணம்)

புறநெகும திட்டத்தின் கீழ் பளை ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள கடைத்தொகுதிக்கு முன்பதாக வெள்ள நீர் தேங்கி கடைக்குள் உட்புகுந்துள்ளதால் கடைவியாபாரிகள் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இக் கடைத்தொகுதிக்கு முன்பாக உள்ள பகுதியில் ஒரு பகுதி கிரவல் மண் பரப்பப்பட்டு சமப்படுத்தப்பட்ட நிலையில் ஏனைய பகுதியில் கடந்த வியாழக்கிழமை பெய்த மழையினால் வெள்ள நீர் தேங்கி அவை கடைக்குள் புகுந்ததால் கடையின் தரைப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் வெள்ள நீரில் சேதமடைந்து பாவனைக்குதவாத நிலை ஏற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கணவனை இழநத பெண்ணொருவர் இக் கடைத்தொகுதியில் கடை வைத்துள்ள நிலையில் அக்கடைக்குள் வெள்ளநீர் தேங்கி பொருட்கள் சேதமடைந்துள்ளதாகவும் இதனால் அப்பெண் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பளைப் பிரதேச சபைக்கு மாதாந்தம் 1500 ரூபா கடை வாடகை செலுத்திவரும் இவர்களின் நிலைதொடர்பில் பிரதேச சபை கவனம் செலுத்தாமல் இருப்பது கவலை தரும் விடயமாகும் என கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (37)

## கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

81 கிலோ கேரளா கஞ்சாவுடன் இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட் டுள்ளதாக இளவாலை பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

யாழ்.கச்சேரி வீதிப்பகுதியைச் சேர்ந்த இளைஞரையும், கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த இளைஞரையுமே இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இதனை விற்பனைக்காக கொண்டு சென்றபோது, இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருநபர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும், இருவரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் இளவாலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

## மேற்படிப்புக்காக உதவித்தொகை வழங்கல்



(வவுனியா)

வவுனியா வடக்கு புளியங்குளத்தில் உள்ள பழைய வாடி எனுமிடத்தில் வசிக்கும் தவராசா தனுகா என்ற யாழ் பல்கலைக் கழகத்தில் கலைப் பிரிவில் மேற்படிப்பு படித்து வரும் 1 ஆம் வருட மாணவிக்கு அவரது ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு உதவித் தொகை அண்மையில் வழங்கப்பட்டது.

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் வேண்டுகோளுக்கு அமைவாக லண்டன் வாழ் சண்முகரட்ணம் நிசாந்தனின் நிதி பங்களிப்பின் மூலம் இந்தஇந்த உதவித்தொகை நேற்றுமுன்தினம் புளியங்குளம் பழைய வாடியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து அமைப்பின் நிர்வாகி செல்வராசா சந்திரகுமாரால் வழங்கப்பட்டது. (90)

## மைலோ கிண்ண கால்பந்தாட்டம்

# முதன்மைசுற்றில் நாமகள், சென். பீற்றர்ஸ்


நவாலி சென். பீற்றர்ஸ்


தெல்லிப்பளை நாமகள்

(மானிப்பாய்)

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் முதன்மைச் சுற்றுப் போட்டிக்கு தெல்லிப்பளை நாமகள் மற்றும் நவாலி சென். பீற்றர்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

நெஸ்லோ லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அணிகளுக்கான தகுதி காண் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் வலிகாமப் பிரதேச அணிகளுக்கான தகுதிகாண் போட்டிகளின் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

முதலாவது காலிறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றிஸ் அணியும் அராலி ஜேம்ஸ் அணியும் மோதின. இரு அணிகளும் கோல் எதனையும் பெற்றுக் கொள்ளாததால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் அராலி ஜேம்ஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் அராலி அண்ணா அணியும் இளவாலை சென். லூட்ஸ் அணியும் மோதின. இதில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றுக் கொண்டமையால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென். லூட்ஸ் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நவாலி சென். பீற்றர்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

நான்காவது காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை நாமகள் அணியும் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணியும் மோதின. இதில் தெல்லிப்பளை நாமகள் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் அராலி ஜேம்ஸ் அணியும் மோதின. ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்தில் சென். பீற்றர்ஸ் வீரர் பகீரதன் முதல் கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய சென். பீற்றர்ஸ் அணி 49ஆவது நிமிடத்தில் மேலுமொரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இந்தக் கோலை றீகன் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து போராடிய ஜேம்ஸ் அணியால் ஒரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தது. இந் நிலையில் நவாலி சென். பீற்றர்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதன்மைச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை நாமகள் அணியும் இளவாலை சென் லூஸ்ட் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நாமகள் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதன்மைச் சுற்றுக்கு முன்னேறியது. நாமகள் அணி சார்பாக கனிஸ்ரன் 18ஆவது நிமிடத்திலும் ஜஸ்டினன் 26ஆவது நிமிடத்திலும் கோல்களை அடித்து அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். இதேவேளை, வடமராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையிலான தகுதி காண் போட்டிகள் நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## தொடரை முழுமையாக வென்றது பங்களாதேஷ்

(சிட்டகொங்)

சிம்பாப்வே அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 186 ஓட்டங்களால் பெரு வெற்றி பெற்றதுடன் தொடரை முழுமையாக கைப்பற்றிக் கொண்டது.

சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று சிட்டகொங்கில் நிறைவு பெற்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 503 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சிம்பாப்வே அணி 374 ஓட்டங்களைப் பெற்றது.

129 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 319 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் மோமினுல் ஹக் ஆட்டமிழக்காது 131, முஸ்பிகுர் ரஹிம் 46, மொஹமதுல்லா 30, தமிம் இக்பால் 65 ஓட்டங்களைப் பெற்றனர்.



449 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஸா 65, சகவ்வா 89, மகசட்ச 38, ரெய்லர் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஷகிப் அல் ஹசன், ஜே. உசைன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் பங்களாதேஷ் அணி 186 ஓட்டங்களால் வெற்றிபெற்றதுடன் டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயனாக மோமினுல், தொடர் நாயகனாக ஷகிப் அல் ஹசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## தென்னாபிரிக்கா பதிலடி




அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்று பேர்த்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி மோர்கலின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 41.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம். மார்ஷ் 67, பெய்லி 25, மைக் வேட் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்கல் 21 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, ஸ்ரெய்ன் 35 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய தென்னாபிரிக்க அணி முதலிரு விக்கெட்டுக்களையும் வேகமாகப் பறிகொடுத்து திணறியது. இந்நிலையில் கப்டன் டி வில்லியர்ஸ் மற்றும் றொசோவ் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து பொறுமையாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இறுதியில் தென்னாபிரிக்க அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டிவில்லியர்ஸ் 48, றொசோவ் 30, டுபிளிசர்ஸ் 14, அம்லா 10 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது மில்லர் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஹசிலிவூட் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக மோர்கல் தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளன.

## இறுதியில் ஜோகோவிச்

(லண்டன்)

உலக ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு சேர்பியாவின் ஜோகோவிச் தகுதிபெற்றுள்ளார். ஏ.டி.பி. உலக ரென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒற்றையர் அரையிறுதியில் நடப்பு சம்பியனும், முதல்நிலை வீரருமான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும், 5ஆம் நிலை வீரர் ஜப்பானின் நிஷிகோரியும் மோதினர். 1 மணி 27 நிமிடங்கள் நடைபெற்ற இந்த மோதலில் ஜோகோவிச் 6-1, 3-6, 6-0 என்ற செட் கணக்கில் நிஷிகோரியை சாய்த்து 4ஆவது முறையாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார்.

## அதிக கோல் ரொனால்டோ சாதனை

யூரோ கோப்பை கால்பந்து சம்பியன்ஷிப்பில் அதிக கோல் அடித்து கிறிஸ்டியானோ ரொனால்டோ சாதனை படைத்தார். பிரான்சில் எதிர்வரும் 2016இல் (யூன் 10-யூலை 10) யூரோ கிண்ண கால்பந்து சம்பியன்ஷிப் நடைபெறவுள்ளது. தொடரை நடாத்தும் நாடு என்ற அடிப்படையில் பிரான்ஸ் அணி பிரதான சுற்றுக்கு நேரடியாக முன்னேறியது. மற்ற அணிகள் தகுதிப்போட்டியில் விளையாடுகின்றன. போர்த்துக்கலில் உள்ள சா ஜோயாவில் நடைபெற்ற போட்டியில் அர்மேனியா, போர்த்துக்கல் அணிகள் மோதின. இதன் முதல் பாதியில் இரு அணி வீரர்கள் கோல் எதுவும் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியில் கோல் அடிக்க வேண்டிய கட்டாயத்தில் இரு அணி வீரர்களும் களமிறங்கின. போட்டியின் 72ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு கோல் அடித்தார். இதற்கு எதிரணி வீரர்களால் எவ்வித பதிலடியும் தர முடியவில்லை. முடிவில், போர்த்துக்கல் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் யூரோ கோப்பை சம்பியன்ஷிப்பில் தகுதிப்போட்டியுடன் சேர்த்து அதிக கோல் அடித்த வீரர்கள் பட்டியலில் ரொனால்டோ முதலிடம் பிடித்தார். இதுவரை இவர் 23 கோல்கள் அடித்துள்ளார். இதற்கு முன் டென்மார்க்கின் ஜோன் தாகி, துருக்கியின் ஹாகென் தலா 22 கோல்கள் அடித்திருந்தனர்.

## இன்றைய ஆட்டம்

(சுன்னாகம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது யாழ். மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது. இன்றைய தினம் நடைபெறவுள்ள போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளும் வெற்றிகளைப் பதிவாக்கியிருப்பதால் இப்போட்டி இறுதி வரை பரபரப்பிற்கு பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்படுகின்றது. (93)

(மானிப்பாய்)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான ஆளுநர் வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டி இன்று மாலை 4.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குபற்றும் அனைத்து அணிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். இதேவேளை, வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட அணிகளுக்ககான ஆளுநர் வெற்றிக் கிண்ண தெரிவுப் போட்டிகள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# ஹட்ரிக்வெற்றி

## மன்னார் பொலிஸ் அணிக்கு



(வவுனியா)

79ஆவது பொலிஸ் கால்பந்தாட்டப் போட்டித் தொடரில் மன்னார் பொலிஸ் அணி மூன்றாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் ஆட்டமொன்று கடந்த 14ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இதில் வவுனியா பொலிஸ் அணியும் மன்னார் பொலிஸ் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இருப்பினும் மன்னார் பொலிஸ் அணிக்கு முற்பாதி ஆட்டத்தில் கிடைத்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி கோலாக்கியது. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்குவந்தது.

இடைவேளைக்குப் பின்னர் போட்டி தடைப்பட்டதால் மன்னார் பொலிஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் மன்னார் பொலிஸ் அணி ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்தது. ஏற்கனவே, முல்லைத்தீவு மற்றும் பொலநறுவை அணிகளுக்கெதிரான போட்டிகளில் மன்னார் பொலிஸ் அணி வெற்றி பெற்றிருந்தது. இவ்வெற்றியின் மூலம் மன்னார் பொலிஸ் அணி ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் மன்னார் பொலிஸ் அணியும் பொலநறுவை பொலிஸ் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜோண்சன் அதிரடிச்சதம்

## தெல்லிப்பளை மகாஜன கல்லூரி இனிங்ஸ் வெற்றி

(தெல்லிப்பளை)

ஜோண்சனின் அதிரடிச் சதத்தின் மூலம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 93 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வவுனியா மத்திய மகாவித்தியாலய அணியும் மகாஜனக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய வவுனியா மத்திய மகாவித்தியாலய அணி நிசாந்தின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வவுனியா மத்திய மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தணிகைபாலன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நிசாந் நான்கு, நிரோசன் மூன்று, வேனுசன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி ஜோண்சனின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் ஜோண்சன் ஆட்டமிழக்காது 101, நிரோசன் 37, நிசாந் 21, வேனுசன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

175 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய வவுனியா மத்திய மகாவித்தியாலய அணி நிசாந்தின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வவுனியா மத்திய மகாவித்தியாலய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோசன் 25, நிறுசன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிசாந் நான்கு, யண்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 93 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (93)

விளையாட்டுச் செய்திகள்

## 3ஆம் இடம் யங்கமன்ஸ்

(நெல்லியடி)

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் மூன்றாமிடத்தை கம்பர்மலை யங்கமன்ஸ் அணி பிடித்துக் கொண்டது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டி கடந்த வெள்ளிக்கிழமை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் கம்பர்மலை யங்கமன்ஸ் அணியும்அல்வாய் மனோகரா அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யங்கமன்ஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இதில் ரதன் இரு கோல்களையும் தர்சன் ஒரு கோலையும் போட்டு யங்கமன்ஸ் அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். (12,90)

### ஆளுநர் வெற்றி கிண்ண கால்பந்து

## காலிறுதி, அரையிறுதி நாரந்தனையில் இன்று

(நாரந்தனை)

தீவக கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான ஆளுநர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி, அரையிறுதி ஆட்டங்கள் இன்று காலை நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ரீதியாக ஆளுநர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதற் கட்டப் போட்டிகள் லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்று வருகின்றன. இதன்படி தீவக கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகள் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் போட்டியில் நாரந்தனை அண்ணா அணியும் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும் மோதின. இதில் அண்ணா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் அணியும் அம்பிகைநகர் சிறிமகேஸ்வரி அணியும் மோதின. இதில் சென். ஜேம்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் புங்குடுதீவு பாரதி அணியும் புங்குடுதீவு சென்.சேவியர் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பாரதி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## இரண்டாவது டெஸ்ட் இன்று

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி இன்றைய தினம் டுபாயில் ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே, நடைபெற்ற முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி அபாரமான வெற்றிபெற்றது. இந்நிலையில் இரண்டாவது போட்டியிலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றிக்கொள்ளும் என கிரிக்கெட் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.



சங்கானை கோட்ட மட்ட கால்பந்துப் போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட அராலி சரஸ்வதி வித்தியாலயத்தின் 18 வயதுப் பிரிவு அணியைக் காணலாம். (48)

# அக்டோபர் புரட்சியும் பேர்லின் சுவரும்

- சுகு-ஸ்ரீதரன் -

நாம் வாழும் காலத்து பதிய தலைமுறைக்கு அக்டோபர் புரட்சி பற்றிய அறிவு பிரக்ஞை இல்லை என்றே கூறிவிடலாம்.

1990 பெரும் பிரளயம் போல் உருவான நுகர்வுக் கலா சாரம் மற்றும் தாராளவாத பொருளாதார முறையில் அடிபட்டுச் செல்லும் தலைமுறை இது.

பொதுவாகவே சுதந்திரப்போ ராட்டம், சமூகமாற்றம் பற்றிய கருத்துக்கள் பலவீனப்படுத்தப் பட்ட நகர்ப்புற இளைஞர் குழாம் ஒன்று உருவாகியுள்ளது.

ஆனால் லட்சோபலட்சம் தொழி லாளர்கள் விவசாயிகள் வறிய வர்களும் பஞ்சமும் நோயுடன் உலகளாவிய அளவில் அவலமுறு கிறார்கள். அக்டோபர் புரட்சியை பாரதி "ஆகா என்றெழுந்தது பார் யுகப் புரட்சி" என்றான்.

ஆனால் இன்று பெர்லின் சுவர் தகர்க்கப்பட்டது தான் உலகவரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியாக உலகளாவிய அதிகார ஊடகங்கள் பிரசாரம் செய்கின்றன.

1800 களின் நடுப்பகுதியில் மார்க்சும் ஏங்கல்சும் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை வெளியிட்டதி லிருந்து தீவிர கருத்து இயக்க வியல் போக்கில் வரலாற்று மெய் நிலையில் 1871 இல் 72 நாட்கள் நீடித்த பாரிஸ்கம்யூன் 1917 இல் இருந்து 73 வருடங்கள் நீடித்த சோவியத் யூனியன் என்பன உருவாயின.

ஆனால் இன்று பெர்லின் சுவர் தகர்வு கொண்டாடப்படுகிறது. நவதா ராளவாத ஏகாதிபத்திய ஊடகங்களால் அவற்றின் காதலர் தினம் போல் ஆக்கப்பட்டிருக்கிறது.

ஆசியாவிலும் ஐரோப்பாவிலும்




அமைந்த ரஸ்சியாவில் புரட்சி குறிப்பாக நடந்தேறி சோவியத் யூனியன் உருவாயிற்று.

பெருவாரியான மக்களின் நலன்கள், சமத்துவமான சமூக அமைப்பு அக்ரோபர் புரட்சியின் அபிலாசைகளாக இருந்தன.

உணவு, நிலம், வீடு, சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு போன்ற பல விடயங்கள் உலகளாவிய அளவில் அக்கறைக்குரியனவாக மாறியதற்கு அக்ரோபர் புரட்சி உந்து விசையாக இருந்தது.

இலங்கையில் இலவசக் கல்வி, இலவச வைத்தியம் இந்தப் பின்னணி யிலேயே உருவானதென்றால் அது மிகையல்ல.

இடதுசாரி இயக்கம் உலகம் முழுவதும் விரவிப் பரவுவதற்கும் உலகளாவிய தேசிய விடுதலை இயக்கங்கள் கிளர்ச்சி உணர்வடைவ தற்கும், நிறவெறி, பெண்கள் சிறார் உரிமை, சுற்றாடல் பிரச்சினைகள் கரிசனைக்குரியனவாக மாறியதற்கும் அக்ரோபர் புரட்சியின் தாக்கங்களை நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

அக்ரோபர் புரட்சியின் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், இந்தியா, மக்கள் சீனம், கியூபா, வியட்னாம், சிம்பாப்வே, அங்கோலா, நமீபியா, தென்னாபிரிக்கா, நிக்கரகுவா, வெனி சுலா, பிரேசில் உட்பட பெருவாரியான லத்தீன் அமெரிக்க- கரீ பியன் நாடுகளில் நிகழ்ந்த மாற்றங்கள் சீர்திருத்தங்கள் முக்கியமானவை.

அக்ரோபர் புரட்சியே சுயநிர்ணய உரிமை என்ற பதாகையை உயர்த்திப் பிடித்தது.

காலனிநாடுகளின் விடுதலைக்கு அது வழிவகுத்தது.

இன்று உலகளாவிய கோடான கோடி வறியவர்கள் பற்றிப் பேசப்படுகிறதென் றால்... சமத்துவமின்மை தொடர்பான கிளர்ச்சிகள் உலகளாவிய அளவில் நிகழ்கிறதென்றால்... அது பிரதானமாக அக்ரோபர் புரட்சி போதித்த அறம்.

பாசிசத்தின் வீழ்ச்சியும் பிரதானமாக அக்ரோபர் புரட்சியின் இயக்கவியலால் தான் நிகழ்ந்தது. பெருவாரியான மக்கள் பற்றிய சிந்தனை உலகளாவிய அளவில் சாதாரண மக்கள் பற்றிய கரிசனை கொண்ட முற்போக்கு அறிவுஜீவிகள் குழாம் ஒன்றை உருவாக்குவதில் உன்னதமான புரட்சியாளர்களை உரு வாக்குவதில், சாதாரண மக்கள் சார்ந்த இலக்கியங்களை சாமானியர்கள் பெரும்பாய்ச்சலாக படைக்கப்படுவதற் கும், சாமானியர்களின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கும் அதுதான் வழி வகுத்தது.

சோவியத் யூனியன் உலகளாவிய அளவில் கற்றுக் கொடுத்த அறம் இன்றளவில் நீடித்து நிலவுகிறது.

சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைந்ததைக் கொண்டாடுபவர்கள் பாசிசத்தின் வீழ்ச்சியை அவ்வளவாக கொண்டாடுவதில்லை.

சோவியத் யூனியனின் பங்களிப்பும் பாசிசத்திற்கெதிராக போராடி அர்ப் பணித்த ஐரோப்பிய மக்களின் தியா கத்தின் விளைவும் தான் இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிந்திய கிழக்கு ஐரோப்பா.

ஆனால் சோவியத் யூனியன் என்ற கட்டமைப்பு உருக்குலைக்கப்பட் டதற்கான காரணங்களை நாம் திறந்த மனதுடன் பார்க்க வேண்டும்.

கட்சி அதிகார கட்டமைப்பாக மாறியது. நெகிழ்வுத்தன்மையற்றதாக கெட்டிப்பட்டுப் போனது. நிரந்தரமாக சலுகைபெற்ற அணி ஒன்று உருவாகியது.

---

# கே.வி. மகாதேவன்



29

- பி.ஜி.எஸ்.மணியன் -

சிவாஜி கணேசன் நடிப்பில் கே.வி. மகாதேவனின் இசை அமைப்பில் வெளிவந்த படம் "வளர்பிறை". வாய்பேச முடியாத ஊமையாக நடிகர் திலகம் அசத்தி இருந்த படம். ஜோடி சரோஜாதேவி.

"பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை வைத்து புரியாமலே இருப்பான் ஒருவன். அதனைப் புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்" - கவியரசு கண்ணதாசனின் அருமையான தத்துவப் பாடல். பாடி யிருப்பவர் டி.எம்.சௌந்தரராஜன். மகாதேவனின் சுகமான இசைக்காகவே கேட்கப்படவேண்டிய பாடல் இது.

"சலசலக்குது காத்து பளபளக்குது கீத்து" - டி.எம்.எஸ் - பி. சுசீலாவின் குரல்களில் தாளம் போடவைக்கும் பாடலின் கச்சிதமான அமைப்பு மனதைக் கொள்ளை கொள்கிறது.

ஆனால் "வளர்பிறை" படமோ வெற்றி பெறாமல், தற்போது அடியோடு மறக்கப்பட்ட படங்களின் வரிசையில் சேர்ந்துவிட்டது.

தேவரின் அடுத்த சாதனைப் படம் "குடும்பத் தலைவன்".

தொடர் வெற்றிகளைக் குவித்து தன்னை நிலைநிறுத்திக்கொள்ள எம்.ஜி.ஆருக்கு உதவிய - அவரது "ஹாட்ரிக்" வெற்றிப் படம் இது.

கண்ணதாசன் - கே.வி.மகாதேவன் - டி.எம்.எஸ். - பி. சுசீலா - இந்த வெற்றிக்கூட்டணியில் அனைத்துப் பாடல்களுமே வெற்றிப்பாடல்கள்தான்.

"அன்றொரு நாள் அவனுடைய பேரைக் கேட்டேன்" - பி.சுசீலாவின் இனிமையான குரலில் இந்தப் பாடலின் நயமும் தரமும் விவரிக்க இயலாத ஒன்று.

"பாடல் வரிகளைப் பார்த்தவுடனேயே ட்யூன் பிறந்துவிடும்" என்று சொன்னாரல்லவா கே.வி. மகாதேவன்? அப்படி கவிஞர் எழுதிக்கொடுத்த பாடலின் வரிகளைப் பார்த்ததுமே அருமையான மெட்டு தானா கவே வந்து விழுந்த வெற்றிப்பாடல் தான் "ஏதோ ஏதோ ஏதோ ஒரு மயக்கம் - அது எப்படி எப்படி எப்படி வந்தது எனக்கும்" பாடல்.

சரணங்களின் ஒவ்வொரு வரியிலும் வரும் கடைசி வார்த்தைகளை கோர்த்துக் கொடுத்து சரணத்தை மகாதேவன் முடித்திருக்கும் நேர்த்தி புருவங்களை உயர்த்தவைக்கிறது.

அதிலும் "பெண்மை என்பது என்னை வென்றது பேச்சு நின்றது வெட்கம் வந்தது." என்ற சரணவரி களை பி.சுசீலா பாடியதும் அதே வரிகளை டி.எம்.எஸ். பாடி முடிக்கும்போது முதல் நடைக்கு முற்றிலும் மாறுபட்ட நடையைக் கையாண்டு தபேலாவை வாசிக்க வைத்து சரணத்தை மகாதேவன் முடித்திருக்கும் விதம் இருக்கிறதே அது அவரால் மட்டுமே முடியும்.

"திருமணமாம் திருமணமாம் தெருவெங்கும் ஊர்வலமாம்" - டி.எம்.எஸ். குரலில் மற்றொரு ஹிட் பாடல்.

"மழை பொழிந்துகொண்டே இருக்கும்" - பி. சுசீலா.

"மாறாதையா மாறாது மனமும் குணமும் மாறாது" - டி.எம். சௌந்தரராஜன்.

அனைத்துமே ரசிகர்களிடம் பலத்த வரவேற்பைப் பெற்று படத்தின் மாபெரும் வெற்றிக்கு துணை புரிந்தன.

இப்படி எம்.ஜி.ஆர் - சிவாஜி என்ற இரு உச்ச நட்சத்திரங்களின் படங்களுக்கும் மட்டும் என்று அல்ல. தான் இசையமைத்த அனைத்துப் படங்களின் பாடல்களையுமே வெற்றிப்பாடல்களாக்கி - என்றும் அழியாமல் நிலைபெறச் செய்வதில் அக்கறை காட்டினார் மகாதேவன்.

இதற்கு அருமையான ஒரு உதாரணம் "வானம்பாடி"



வானம்பாடி

எஸ்.எஸ். ராஜேந்திரன், தேவிகா, டி.ஆர். ராஜகுமாரி, எஸ்.வி. சஹஸ்ரநாமம், முத்துராமன், ஷீலா, டி.ஆர். ராமச்சந்திரன், ஆர்.எஸ்.மனோகர் ஆகியோருடன் குழந்தை நட்சத்திரமாக "உலக நாயகன்" கமலஹாசன் - என்று மிகப் பெரிய திறமைசாலிகளின் கூட்டமே படத்தில் இருந்தது.

கவிஞர் கண்ணதாசன் கதை வசனம் பாடல்கள் எழுதித் தானே சொந்தமாகத் தயாரித்த இந்தப் படத்தின் மிகப் பெரிய பலமே அதன் பாடல்கள் தான். பாடல்களை முழுவதுமாக கவிஞர் எழுதிக் கொடுக்க அதன் பிறகே அவற்றுக்கு மெட்டுப்போட்டார் கே.வி. மகாதேவன்.

இந்தக் கட்டுரைக்காக "வானம்பாடி" படப்பாடல்களை மறுபடி கேட்டபோது என் மனசும் உடம்பும் ஒரு முறை சிலிர்த்துப் போனது நிஜம்.

"கங்கைக் கரைத் தோட்டம்" - கண்ணன் மீது கவிஞர் கொண்ட பக்தியை நாயக நாயகி பாவத்தில் வெளிப்படுத்தும் பாடல். முழுக்க முழுக்க சுத்தமான "பீம்ப்ளாஸ்" ராகத்திலேயே பாடலை அமைத்து அதை பி.சுசீலாவின் இனிமை நிறைந்த குளுமைக் குரலில் பதிவு செய்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

"ஏட்டில் எழுதி வைத்தேன் எழுதியதைச் சொல்லிவைத்தேன்" - டி.எம். சௌந்தரராஜனு டன் ஹம்மிங்கில் பாடகி எல்.ஆர். ஈஸ்வரி இணையும் பாடல்.

"ஆண்கவியை வெல்லவந்த பெண்கவியே வருக" - டி.எம்.எஸ். - சுசீலா பாடும் ஒரு போட்டிப் பாடல்.

காதல் தோல்வியால் விரக்தியடைந்து மனம் தளர்ந்த நாயகனுக்கு நம்பிக்கை ஒளி ஊட்டும் வண்ணம் தன் பதில்களை பாடலாக நாயகி சொல்வதுபோல அமைந்தது.

"காதலித்தாள் மறைந்துவிட்டால் வாழ்வு என்னாகும்?" - என்று அவன் கேட்க.. அவள் வாயிலாகக் கவிஞர் சொல்லும் பதில்..

"அன்பு காட்டுகின்ற வேறிடத்தில் காதல் உண்டாகும்".

உடனே அவன் ஆவேசமாக, "ஒருமுறை தான் காதல் வரும் தமிழர் பண்பாடு.

அவளும் சளைக்காமல் கூறுகிறாள்

"அந்த ஒன்று எது என்பதுதான் கேள்வி இப்போது."

வருவதெல்லாம் காதலித்தால் வாழ்வதெவ்வாறு?" என்று அவன் காட்டமாகக் கேட்க..

"தன் வாழ்க்கையையே காதலித்தால் புரியும் அப்போது" - என்று அழுத்தமாக அவள் கூறி அவனைப் பேச்சிழக்க வைக்கிறாள்.

விருத்தமாக துவங்கி பாடலாக விரியும் பாடலின் சொல்லும் பொருளும் உணர்ந்து இசை அமைத்து இத்தனை வருடங்களுக்கு பிறகும் நினைவில் நிறுத்தி இருக்கிறார் கே.வி. மகாதேவன்.

(தொடரும்)

மறுபக்கம் ஏகாதிபத்திய உலகு சோவியத் கட்டமைப்பை அழிப்பதற்கான முயற்சியில் - சதிவேலைகளில் ஓயாது ஈடுபட்டது.

புதிதாக உலகளாவிய அளவில் உருவான நவதாராளவாதம் எல்லையற்ற சுரண்டலுக்கான கதவுகளை திறப்பதற்காக அசைத்துக் கொண்டிருந்தது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் புற்றீசல் போல் உலகளாவிய அளவில் பரந்தன.

புரட்சி எழுச்சிகள் பொதுவுடைமைச் சித்தாந்தம் செயற்பாடுகள் தலையெடுத்துவிடக் கூடாது என்பதற்காக காப்பிரேட்டுக்களின் நலன்களுக்குப் பாதகமில்லாத அதனை தக்கவைக்கக் கூடிய சீர்திருத்தங்களை இவை சாதாரண மக்கள் மட்டத்தில் மேற்கொண்டன...

ஆனாலும், அக்ரோபர் புரட்சியால் உலகளாவிய அளவில் நிறுவப்பட்ட தார்மீக வலுக்கள் தோற்கடிக்கப்பட முடியவில்லை.


காப்பிரேட் உலகம் உலகவளங்களை ஈவிரக்கமின்றி சுரண்டித் தீர்ப்பதில் அசுர வேகம் கொண்டுள்ளது.

மனிதப்பேரழிவு மற்றும் இயற்கை அழிவு அபாயத்தின் விளிம்பை எட்டியுள்ளது.

இது பற்றிய பிரக்ஞையே இல்லாமல் உலகம் சென்று கொண்டிருக்கிறது.

இந்த விபரீதம் தடுத்து நிறுத்தப்படவேண்டும். "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற நிலை மாறவேண்டும். யார் சொன்னது அக்ரோபர் புரட்சி உலகளாவிய அளவில் தோற்றதென்று? அது இன்றளவில் உலகளாவிய சுனாமி என்பதை உலக வரலாறு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. காப்பி ரேட்டுகளின் வெற்றி தற்காலிகமானதே.அவர்கள் உக்ரேனின் ரஸ்சிய எல்லையில் பதட்டத்தைக் காட்டுவதும் அதனால் தான். ஆகா என்று மீண்டும் யுகப்புரட்சி நடந்து விடுமோ என்ற அங்கலாய்ப்புத்தான்.

# உண்மையில் நீங்கள் யார்?



மரத்தில் காய், கனிகள் அதிகமாகும்போது மரக்கிளை வளைந்து கவிழ்கிறது. மரம், காய், கனிகளை இழந்தவுடன் பாரம் நீங்கி விடுதலைபெற்று வெறுமையாகி "மலர்தலுக்கு" தயாராகிறது. இதை நாம் மரம், செடி, கொடி, தானியங்களில் பார்க்கிறோம். இதேபோல் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய தன்முனைப்பை வீழ்த்தி, வெறுமையானவராகி, விடுதலைபெற்று உண்மை மனிதனாக மலர்வதற்குத் தயாராக வேண்டும்.

பிரித்துப் பார்க்கத் தெரியாத, நல்லது - கெட்டது தெரியாத, பாவ - புண்ணியம் தெரியாத, நரகலோகம் - சொர்க்கலோகம் அறியாத, அந்த அப்பாவித்தனம், வெகுளித்தனம், குழந்தைத்தனம் இவைதான் உண்மைத்தன்மை. ஒவ்வொருவரும் உண்மையானவராக வாழ்ந்து, இறந்து மரணத்தைப் பெறுமதியாக்க வேண்டும்.

வாழ்வின் இறுதி அனுபவம் மரணம்தான். ஒவ்வொருவரும் பிறந்தவுடனேயே மரணத்தை நோக்கிய பயணம் ஆரம்பமாகிறது. மரணமானவுடன், பிறப்பை நோக்கிய "மலர்தல்" ஆரம்பமாகிறது. வாழ்வின் "இறுதி" அனுபவமான மரணம் அடுத்த வாழ்விற்கான "ஆரம்ப" அனுபவமாகிறது. இரண்டு அனுபவங்களுக்கும் நுழைவாயில் கதவு ஒரே மாதிரியானவைதான்.

மரணம்தான் மிக முக்கிய நிகழ்ச்சி. பிறப்பைவிட முக்கியமானது. ஏனென்றால் பிறப்பு ஏற்கெனவே நடந்துவிட்டது. மரணம் இனிமேல்தான் நடைபெற வேண்டியுள்ளது. அதை உணர்வுபூர்வமாக வரவேற்கத் தயாராக வேண்டும். அப்படியென்றால் விடைதேட வேண்டிய அந்த வினா எது?

நான் யார் என்பதுதான்! ரமண மகரிஷி எப்போதும் தன் உபதேசங்களில் கேட்கும் கேள்வி இது. இந்தக் கேள்வியை ஒவ்வொருவரும் தங்களுக்குள் கேட்கத் தங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்பார். இதைத்தேடி "உள்ளே" போனால் "நான்" என்பதேயில்லாமல் போய்விடும்! அந்தத் தேடலில் உண்மையில் ஒருவர் கரைந்து விடுவதற்காகவே மகரிஷி அந்தத் தேடலை வலியுறுத்தினார் என்பது என் எண்ணம்.

உங்கள் நினைவுகள், பெயர், பெற்றோர், குடும்ப விவரம், ஊர், பட்டம், பதவி, அந்தஸ்து, கௌரவம், இனம், மதம், மொழி, நாடு அனைத்தும் முற்றிலுமாக உங்கள் நினைவிலிருந்து வெளியேற்றிவிட்டால் நீங்கள் யார்?

எதுவுமே அறிந்திராத நிலையில் நீங்கள் யார்? என்பதே உங்களுக்குத் தெரியாது! உங்களுக்கென்று தனித்துவமோ, பெயரோ இருக்காது. "நான்" என்னும் உணர்வே இல்லாமல் போய்விடும்!

**('ஆச்சரியமான தகவல்கள்' நூலில் எஸ். குருபாதம்)**

## "டொனால்ட் டக்", மிக்கி மௌஸ் தங்கத்திலும் வெள்ளியிலும்

பசிபிக்கைச் சேர்ந்த நியூ(NIUE) நாடு நியூசிலாந்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள 1400 மக்கள் தொகை கொண்ட மிகச் சிறிய நாடு. வோல்ட் டிஸ்னியின் புகழ் பெற்ற கார்ட்டூன் பாத்திரமான "மிக்கி மௌஸ்" ஒரு பக்கமும், இரண்டாம் ராணி எலிசபெத் மகாராணி உருவத்தை மறுபக்கமும் கொண்டு புதிய நாணயங்களை வெளியிட்டுள்ளது.

தங்கம், வெள்ளி ஆகியவற்றால் உருவான இந்த நாணயங்கள் வெளியான ஏழே நிமிடத்தில் ஆயிரம் நாணயங்கள் விற்றுத் தீர்ந்தன. 28.3. கிராம் எடையுள்ள டொனால்ட் டக் வெள்ளி நாணயங்களின் விற்பனை அமோகம்.

அதிக விலையுள்ள 7கிராம் எடை கொண்ட தங்க நாணயங்களில் மிக்கி மௌஸ், கூ.ஃ.பி, ஃ.புளூடோ மற்றும் மின்னி மௌஸ் ஆகியவற்றையும் அந்த நாடு உருவாக்க உள்ளது.


நியூ (NIUE) நாட்டிற்காக இந்த நாணயங்களை அச்சிட்டுத் தந்த நாடு நியூசிலாந்து ஆகும். விற்பனையாகும் ஒவ்வொரு நாணயத்திற்கும் நியூசிலாந்து நாடு "ரோயல்டி" பெறுகிறது.



வோல்ட் டிஸ்னியின் கார்ட்டூன் உருவங்களாக உலக குழந்தைகளிடம் பேரபிமானம் பெற்ற "டொனால்ட் டக்"கும் சரி, "மிக்கி மௌஸு"ம்" சரி வெள்ளி, தங்கத்தில் இன்றும் மின்னுகின்றன.

# பெரியார்: சில புரிதல்கள்

**- எம்.எஸ்.எஸ். பாண்டியன் கட்டுரையிலிருந்து.**



இந்தியாவின் பண்டைய இலக்கியங்கள் மட்டுமல்ல, தேசியவாதிகளால் முன்னிறுத்தப்படும் ஆயிரக்கணக்கான ஆண்டு வரலாறும்கூட மேட்டுக்குடியினரின் ஆதிக்க வரலாறே என்றார் பெரியார். மேல்சாதியினர், தங்கள் தலைமைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் சவால்களைக் கொடுமையாக அடக்குவதும், முடியாத கட்டத்தில் எதிரிகளோடு இணங்கிப் போவதுமே இவ்வரலாறு என்றுரைத்தார்.

இந்த வரலாற்றை பழம்பெருமையெனத் தொடர்ந்து சொல்லி வருவதன் மூலம் நிகழ்காலத்திலும் அடித்தட்டு மக்களை அடக்கிவைக்க முடிகிறது என்பது பெரியாரின் கருத்து. பழமை மறையவில்லை; இன்றும் உயிர்த்துடிப்புடன் இருக்கிறது; எல்லோருக்கும் சுதந்திரம், சமதர்மம் என்பதை மறுக்கிறது. எனவே தற்சார்புடைய குடியுரிமை வழங்கும் தேசம் உருவாக வேண்டுமெனில், பழமையுடன் போராட வேண்டும் என்பது அவரது அரசியல் நோக்கு.

மதம் சார்ந்த தொன்மங்கள் (புராணக் கதைகள்) சூத்திரர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் பெண்களையும் இழிவுபடுத்தப் புனையப்பட்ட பொய்ம்மைகள், கற்பனைகள் என்ற பெரியார், அவற்றைப் பகுத்தறிவு சார்ந்த விமர்சனத்துக்கு உட்படுத்தினார். இவ்வகை விமர்சனம், வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது.

### யார் போராடுவது?

அநீதிக்கும் அடிமைத்தனத்துக்கும் ஆளானவர்கள் சுயமரியாதையால் உந்தப்பட்டு, தாம் தமக்காகவே கிளர்ந்து எழும்போதுதான் விடுதலை கிடைக்கும் என்பது பெரியாரின் நம்பிக்கை. பெண் விடுதலைக்காக ஆண்கள் மட்டுமே குரல் கொடுப்பதை ஏற்காத அவர், பெண்கள்தான் அதற்கான அரசியலைத் தங்கள் கையிலெடுத்துப் போராட வேண்டும் எனக் குறிப்பிடுவதைச் சான்றாகக் காட்டலாம்: "எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா?" என்றார் பெரியார்.

### பெரியாரின் நவீனத்துவம்

தன்னுடைய சமத்துவம் அடிப்படையிலான தேசியத் தேடலுக்குப் பயன்படாத, தமிழ்ப் பழமை பெரியாரைப் பரிதவிக்கச் செய்யவில்லை. மாறாக, தன்னுடைய தேசியத் தேடலைப் பழமையிலிருந்து விடுத்து, எதிர்காலத்தில் நிலைகொள்ள வைத்தார். "மாற்றம் என்பது தவிர்க்க இயலாதது, அதை யாராலும் தடுக்க முடியாது" என்பது பெரியாரது உறுதியான நிலைப்பாடு.

### பெரியாரின் மொழி

தேச உருவாக்கத்தின் மையக் கூறான மொழி என்பது பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு ஏற்றதாக, சமதர்மம், சுதந்திரம் ஆகியவற்றை வளர்ப்பதற்காக அமைய வேண்டும். பகுத்தறிவுத் தளத்திலிருந்து தமிழையும் மதத்தையும் பிரிக்க வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது. "எனது பாஷை, எனது தேசம், எனது மதம் என்பதற்காகவோ, எனது பழைமையானது என்பதற்காகவோ ஒன்றையும் நான் பாராட்டுவதில்லை" என்றார்.

### பகுத்தறிவு ஒரு நெடும் பயணம்!

மானுட விடுதலை அடிப்படையிலான தேசிய உருவாக்கம் முடிவற்றதொரு தொடர் போராட்டமே என்பதுபோல், பகுத்தறிவு வாதமும் முடிவற்ற மாற்றங்களைக் காலந்தோறும் எதிர் கொள்ளும் என்பதை அவர் மனம் கொண்டிருந்தார். "பகுத்தறிவு என்று சொல்வது மாறிமாறி வருவதாகும். இன்று நாம் எவை எவை அறிவுக்குப் பொருத்தமானவை என்று எண்ணுகிறோமோ அவை நாளைக்கு மூடப் பழக்கவழக்கங்கள் எனத் தள்ளப்படலாம். அதுபோலத்தான், நமது பின்னோர்கள் என்னைக் குறித்துக்கூட ஒருகாலத்தில், "ராமசாமி என்ற மூடக் கொள்கைக்காரன் இருந்தான்" என்றும் கூறலாம். அது இயற்கை மாற்றத்தின் அறிகுறி காலத்தின் சின்னம்" என்றார் பெரியார்.


### எல்லையற்ற தேசம்

தேசியம் என்பது ஒரு தேடலே அன்றி, ஒரு முடிவான உருவாக்கம் அல்ல எனும் கருத்தின் அடிப்படையில்தான், பெரியார் தான் தேடிய தேசத்துக்குப் புவியியல் எல்லைகளைத் தெளிவாக வகுப்பதுபற்றி அதிக அக்கறை காட்டவில்லை. அவருடைய தேசம் மொழி, கலாசார அடிப்படையில் புவியியல் எல்லைகளை வகுக்க மறுத்தது. எல்லைகளை மீறி ஒடுக்கப்பட்டோர் இணைந்து விடுதலை தேடுவதே அதன்கூறு!

### ஏன் எதிர்த்தார்?

கடவுள், மதம், காந்தி, காங்கிரஸ், பார்ப்பனர்கள் அனைத்தையும் ஒருசேர பெரியார் எதிர்த்தமைக்குக் காரணம், உருவாகி வந்த இந்திய தேசத்தில் சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டோர்கள், பெண்கள் போன்ற ஒடுக்கப்பட்டவர்கள் சமமான குடியுரிமையைப் பெறுவதற்கு இவை தடையாக உள்ளன என்பது பெரியாரின் புரிதலாகும். ஒரு தேசத்தின் அரசியல் கட்டமைப்பில் சமமான, தற்சார்புடைய குடியுரிமைதான் அடித்தளம் என்று அவர் கருதினார்.


**(நன்றி: தி இந்து)**





காரைநகர் பிரதேசத்திலுள்ள 10 முன்பள்ளிகள் இணைந்து நடாத்திய கலை விழா அண்மையில் காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் நடைபெற்றபோது... (50)

# நிகழ்வுகளின் பதிவுகள்....

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கி சங்கத்தால் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது கலந்து கொண்டவர்களையும் ஈ.பி.டி.பி. நல்லூர் அமைப்பாளர் அ.ரவீந்திரதாஸன் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம்.




யாழ். தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது... (48)





இலங்கை கல்விச் சமூக சம்மேளனம், பாடசாலை மாணவர்களிடையே மாதிரி பரீட்சை ஒன்றை ஹட்டன் கல்வி பணிமனையின் அனுமதியுடன் தேர்ந்தெடுக் கப்பட்ட பாடசாலைகளில் நடாத்த திட்டமிட்டுள்ள நிலையில் அதற்கான வினாத்தாள்கள் சம்மேளனத்தின் ஆலோசகரினால் துறைசார்ந்த அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது. (90)



அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள வீதியில் வெள்ள நீர் தேங்கி போக்கு வரத்துக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது. (85)

மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களை சைவ மகாசபையின் ஒழுங்குபடுத்தலில் சந்நிதியான் ஆச்சிரமம் மற்றும் இந்து சமயம்சார்ந்த அமைப்புகள் ஒன்றிணைந்து நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன் உயிர்நீத்தவர்களுக்கான ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். (48)

# மன்னாரில் ஈக்களின் பெருக்கத்தால் தொற்றுநோய் ஏற்படும் அபாயம்

## அசௌகரியங்களை எதிர்நோக்கும் மக்கள்

(மல்லாவி)

மன்னார் மாவட்ட நகரப் பகுதிகளில் இலையான் பெருக்கமும் இரவில் நுளம்புத் தொல்லையும் அதிகரித்துள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக மன்னார் நகர்ப் பகுதிகள் எங்கும் இலையான் பெருக்கத்தாலும் நுளம்புகளாலும் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

அதாவது வயிற்றோட்டம், வைரஸ் காய்ச்சல்களால் சிறுவர் முதல் முதியோர் வரை பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளதுடன், இவ்வாரத்தில் மட்டும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இச்சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோர் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நகர்ப்பகுதிக்கான நுளம்பு புகை அடிப்பது சுகாதாரத் திணைக்களத்தின் கடமையாகவுள்ள நிலையில் இந்நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எனினும் மன்னார் நகர சபையினால் காலை முதல் மாலை வரை நகர்ப்பகுதியில் காணப்படும் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டு வருகின்ற நிலையிலும் இலையான்களும் நுளம்புகளும் குறைவதாக இல்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து நிறுவனங்களும் பொதுமக்களும் சுகாதார வைத்திய அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (140)

# செவிப்புலன் கருவிக்கு விண்ணப்பிக்கலாம்

யுத்தம் மற்றும் வறுமை காரணமாக செவிப்புலன் இயந்திரத்தை கொள்வனவு செய்ய முடியாதுள்ள உறவுகளுக்கு இதனை இலவசமாக வழங்க யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகம் முன்வந்துள்ளது.

இந்த உபகரணம் தேவைப்படுபவர்கள் உரிய மருத்துவ சான்றிதழ்களை யாழ்ப்பாணம் றோட்டறிக் கழக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலக்கம் 359 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பதிவு செய்து கொள்ளுமாறும் மேலதிக தொடர்புகளுக்கு Rtn பிரசாந்தன் 0718473970 எனும் தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் றோட்டறிக்கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

# ஆலயங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கல்



வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஊடாக சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்ட ஆலயங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அந்த வகையில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் வழிபாடுகளைத் தொடர்ந்து பயன்தரு மரங்கள் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானஆலய வளாகத்தில் நாட்டிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர், தேவஸ்தானத்தினர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (48)

# மாணவர்கள் கௌரவிப்பு

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 106 மாணவர்கள் பிரதேச சபையினால் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்பட்டதுடன் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டன. (18)

# நல்லூர் கிளை நூலகத்தின் வாசிப்பு மாதப்போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் நல்லூர் கிளை நூலகத்தினால் முன்பள்ளி பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்டபோட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**பேச்சு -தமிழ் தரம் - 5**

தே.அனற்தர்சிகா (திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), கி.விணோஜா (நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), ஜெ.கனுஜன் (நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்).

**பேச்சு ஆங்கிலம் தரம் -3**

இ.சங்கவி (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மோ.சாருஜா (நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), எஸ்நிரோசினி (இந்து ஆரம்ப பாடசாலை), ப.சிறிதரன் (யாழ் மத்திய கல்லூரி).

**தரம் - 4**

எம்.பிருந்தா, ஜொயிலின் தர்மிகா (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை), சி.அபியுகன் (நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்).

**தரம் - 5**

எஸ்.திவானன் (புனித ஜோண பொஸ்கோ வித்தியலயம்), அ. அபிசாயூட் (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை), எஸ்.ரிஷிகரன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

**தரம் 6,7, 8**

எஸ்.ஜீவிதா, அ.அஷாரிஹா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), கு.மதிவதனி (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்).

**பேச்சு தமிழ் தரம் 6,7,8**

க.அனற்கியூரி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), ர.திலக்சனா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), பா.வைஸணவி (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை).

**தரம் - 9, 10, 11**

ர.புஸ்பகரணி, ஜே.திலக்சகா, ச.கஜானி (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்).

**தமிழ் 12, 13**

அ.மக்சிகா, இ.ரதிதேவி, ஞா.ஞானமலர் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்).

**பொது அறிவு**

வி.விசாகன் (யாழ் செங்குந்தா இந்துக்கல்லூரி).

**கட்டுரை 6,7,8**

ச.தாரணி (நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்), ரி.பானுஜா (கனகரத்தினம் மத்திய மகா வத்தியாலயம்), ம.பிருந்தா (இந்து தமிழ் பெண்கள் பாடசாலை).

**தரம் 9,10,11**

எஸ்.ஹரிஹரன் (கனகரத்தினம மத்திய மகா வித்தியாலயம்), அலகசனா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), எ.விதுஷா (யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம்), த.ஹம்சா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்).

**தரம் 12, 13**

ச.சாருதா (செங்குந்தா இந்துக் கல்லூரி), வி.கோபிகா (திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம்), செ.சஜித்தா (செங்குந்தா இந்துக் கல்லூரி).

**கட்டுரை ஆங்கிலம் 6,7,8**

ஆர்.ஜீவிதா (திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம்), எஸ்.கேசிகன் (யாழ்.இந்துக் கல்லூரி), அ.அஷாரிஹா (யாழ்.வேம படி மகளிர் கல்லூரி).

**தரம் 9,10,11**

கே.கிஷான் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), ஆர்.கனிஸ்ரன் (புனித பத்திரிசியார் கல்லூரி), ஜெ.மேரி சசிரேகா (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்).

**12, 13**

ஆர்.குலோறி பிரிந்தா (திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), பி.விசாகன் (செங்குந்தா இந்துக் கல்லூரி). (முற்றும்)




## அரச கரும மொழிகள் ஆணைக்குழு

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவில் காணப்படுகின்ற

- ❑ மொழி உத்தியோகத்தர்
- ❑ இணைப்பு உதவியாளர்கள்
- ❑ சாரதி மற்றும் காரியாலய உதவியாளர்கள்

போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**மொழி உத்தியோகத்தர்கள்** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். மும் மொழிகளிலும் மொழி பெயர்க்கக்கூடிய அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் கணனி பாவனை அறிவு இருத்தல் வேண்டும். ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டவராக இருத்தல் வேண்டும்.

**இணைப்பு உதவியாளர்கள்** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் மனிதவள முகாமைத்துவம் மற்றும் சமூக விஞ்ஞானம் அல்லது மொழி சம்பந்தமான பட்டம் பெற்றிருத்தல். நிருவாகம், இணைப்பு, நுண்ணாய்வு செயற்பாடுகள் சம்பந்தமாக அனுபவம் பெற்றிருத்தல், சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் அறிவு மற்றும் கணனிப் பாவனை சம்பந்தமான அறிவு இருத்தல் வேண்டும்.

**சாரதிகள்** - கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது இரண்டு பாடங் களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் செலுத்தும் 'ஏ' தர அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**காரியாலய உதவியாளர்கள்** - கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது இரண்டு பாடங் களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பொதுவான தகைமைகள் : 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல.

விண்ணப்பதாரிகள் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணபத்திற்கு ஏற்ப தயாரித்த தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, 95, ஆனந்த ராஜ கருணா மாவத்தை, கொழும்பு - 10' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

## திறந்த போட்டிப் பரீட்சைகள்

இந்து அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை (இந்து தஹம் பாடசாலை) - 2013 (2014) எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் II ஆம் தர உதவி சுங்கப் பரிசோதகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

தேசிய நடன / சங்கீத பரீட்சை - 2014 (எழுத்துப் பரீட்சை) எதிர்வரும் 29 ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் நிறைவேற்று அலுவலகர் தரத்தின் வகுப்பு I தரம் II இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சை - 2012 (2014) எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

உதவி விடுதி மேற்பார்வையாளர்கள்(ஆண் / பெண்) மற்றும் உதவி மாணவ விடுதிக் காப்பாளர்கள் (ஆண் / பெண்) பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் ப்ரீட்சை - 2014 எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

❑ ❑ ❑ ❑ ❑ ❑

இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் (விசேட பதவியணி) III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ளது.

## வேலைவாய்ப்புச் செய்திகள்

ஜாம், கோடியல், பிஸ்கட் கிளவுஸ், பால்மா, டொபி, தொழிற்சாலைகளில் உற்பத்தி பொதியிடல் லேபல் பிரிவுகளுக்கு 18 -55 வயது ஆண், பெண் தேவை (யாழ்ப்பாணம், வவுனியாவிலிருந்து வரலாம்) உணவு, தங்குமிடம் உண்டு.

தொடர்புக்கு - 0774457980

தொகுப்பு:- சி.என்.எச். சாலீஸ்

## பண்டிதர் பரீட்சை. வெளியாகின பெறுபேறுகள்

ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் கீழைத்தேசயக் கல்விக் கல்லூரியால் நடாத்தப்பட்ட பாலபாண்டிதர், பண்டிதர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன.

**பாலபாண்டிதர் பரீட்சைப் பெறுபேறுகள்**

**இரண்டாம்பிரிவு சித்தி**- தாந்திப்பிள்ளை கோபால கிருஷ்ணன், குமரன்வீதி, களுவாஞ்சிக்குடி,

**முதற்பிரிவு சித்தி**. கெங்காதர ஐயர் சர்வேஸ்வரன் ஈவினை புன்னாலைக்கட்டுவன்-

**புனர்நூனசித்தி**- தம்பிஜயா மனோஜ்குமார் செட்டிவளவு இணுவில் மேற்கு

**புனர் நூனசித்தி**- கணேசமூர்த்தி, மங்கள மூர்த்தி அராலி தெற்கு வட்டுக் கோட்டை-

**பண்டிதர் பரீட்சைப் பெறுபேறு**

**இரண்டாம் பிரிவு சித்தி**- வெற்றிவேலு வரதராசன்-வட்டு மேற்கு வட்டுக்கோட்டை

**நூனசித்தி** (பாடவகை01)- தம்பி ஐயா மனோஜ்குமார் செட்டிவளவு இணுவில் மேற்கு-

**சித்தி**-அப்துல் ரகுமாரன் சுஜானாபேகம், உப்புக்களம் மன்னார்

**சித்தி**-ஜெயகாந்தராஜா மணிமலர் கோண்டாவில் மேற்கு கோண்டாவில்-

**இரண்டாம் பிரிவு சித்த** - திருமதி நவதீசன் உதயகலா, சங்கானை மேற்கு சங்கானை-

**சித்தி**-மார்க்கண்டு கணநாதன் அராலி வடக்கு, அராலி வட்டுக் கோட்டை

(10)

## இந்தோனேசியாவில் நில அதிர்வு இலங்கைக்கு ஆபத்து இல்லை


(கொழும்பு)

இந்தோனோஷியாவில் ஏற்பட்ட நிலஅதிர்வை அடுத்து ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தோனோஷியாவின் கிழக்குப பிராந்திய கடற்பரப்பில் நேற்று முன்தினம் 7.3 ரிக்டர் அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது.

நிலஅதிர்வு ஏற்பட்ட பகுதியை சூழ 300 கிலோமீற்றர் தூரத்திற்கு அபாயகரமான அலைகள் ஏற்படக் கூடிய சாத்தியம் உள்ளதாக பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் எச்சரித்துள்ளது. எனினும் நில அதிர்வினால் உடனடியாக ஏற்பட்ட சேதங்கள் மற்றும் இழப்புக்கள் குறித்து எந்தவித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை.

அதேவேளை ஆழிப்பேரலை தாக்கும் அபாயம் இலங்கைக்கு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது



## பரமர் சங்கமம்

ஈணவும் ஏலாது முக்கவும் ஏலாது எண்ட கூற்றுத்தான் ஞாபகம் வருகுது உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தினதும் தாய்மைப் பேற்றை அடையும் தகுதி காண் பொருளாகவே இந்தக் கூற்றும் அமைஞ்சிருக்கு.

யாழ். சுகாதாரத்திணைக்களத்தால் விடுக்கப்பட்ட ஓரறிக்கையால் நூறுபேர்கள் தற்கொலை செய்துள்ளார்கள் ஆயிரக்கணக்கானோர் தொழில்களை இழந்து நடுத்தெருவுக்கு வர ஆயத்தப்படுத்துகிறார்கள் எண்டெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

மறுபக்கம் பாத்தால் மலக்கழிவுநீரால் வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் ஐஸ்கிறீம் குளர்பானத்தில் உயிர்க்கொல்லி வைரசுகள் பெருகி நெருப்புக்காச்சல் போன்ற விசக்காச்சல்கள் பெருக வாய்ப்புள்ள தெண்ட வைத்திய கணிப்புகளை தூக்கி அடிக்கும் விதத்தில் பிரசாரங்களும் போராட்டங்களும் நடத்தப்படுகின்றன.

நாட்டில் வரக்கூடிய நோய்த்தாக்க ஆபத்துகளை அவ்வப்போது கண்டறிந்து எச்சரிக்கை செய்யாவிட்டால் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மீது சீறுகிறார்கள் அதனை ஆதாரங்களோடை நிரூபித்தால் வேறையாரிடமோ பெருந்தொகை பணத்தைப் பெற்றுக்கொண்டு சிறுதொழில்வர்த்தகரை நசுக்கிறார்களென்கிறார்கள்.

பத்திரிகைகளில் வெளிவரும்போது தான் தெரியுது குடாநாட்டில் 59 ஐஸ்கிறீம் தொழில் நிலையங்கள் இயங்கும் புதுமை இங்கை வாழக்கூடிய சனத் தொகைக்கு இந்த 59 நிலையங்களும் கூடி விட்டதாகவே படுகிறது. உற்பத்திசெய்யப்படும் குளிர்களி வகைகள் அனைத்தும் வித்துத் தீர்ந்து விடுவதுமில்லை.

இப்பொருள்கள் நாட்கள் வாரங்களாக தேக்கமடைந்தால் அதனில் உற்பத்தியாகும். பற்றிரீயாக்கள் ஏற்கனவே குறைந்து போயுள்ள சனத்தொகையைக் குறைக்க வேறு ஆயுதங்களாதேவை எபோலா இண்டைக்கு மனித இனத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பயங்கர நோயாகத் திகழ்கிறது.

அரச அதிகாரிகள் அதிலும் உயிர்களோடை சம்பந்தப்பட்ட சுகாதாரச் சேவை அதிகாரிகளை எழுந்த மானமாக காசுக்காக பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்களென்பதை பொறுப் பற்றவன் கூற்றாகவே எடுக்க வேண்டும். அவர்களை அரசு சும்மாவிட்டு விடுமா?

வர்த்தகர்கள் லாபமடைவதற்காக கலப்படம் செய்வது புதுமையான ஒன்றல்ல அதனை வெளிக்கொணராவிட்டால் நோய்களால் மாழப்போவது எத்தினை லட்சம் உயிர்கள், தரமான பொருளை உற்பத்தி செய்து விற்கவும் முடியாது சந்தைக்குத் தரமான பொருட்களைத்தருவிப்பதையும் தடுப்பது ஈணவும் ஏலாது முக்கவும் ஏலாதெண்டால் பிளையோ சொல்லுங்கோ பாப்பம்...

## மலையக அனர்த்த பிரதேசங்களில் விசேட சனத்தொகை கணக்கெடுப்பு

### வலியுறுத்துகிறது அனர்த்த முகாமைத்துவ பிரிவு

மண்சரிவு அபாயம் நிலவுகின்ற மலையக பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் சனத்தொகை விபரங்களை திரட்ட வேண்டிய தேவை இருப்பதாக நாட்டின் பேரிடர் முகாமைத்துவ நிலையம் கூறியுள்ளது.

கொஸ்லாந்தை - மீரியாபெத்தை மண்சரிவில் சிக்கி, உயிரிழந்தவர்களின் 12 சடலங்கள் கிடைத்த நிலையில், மேலும் 19 பேர் புதையுண்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பேரிடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத்லால் குமார பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

எனினும், இந்தப் பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்று நம்பப்படும் 44 பேர் தொடர்பில் எவ்வித தகவல்களும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இவர்கள் பெரும்பாலும் மண்சரிவு அழிவு நடக்க முன்னதாக அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியிடங்களுக்கு சென்றிருக்கக்கூடும் என்று நம்பப்படுவதாகவும் சரத்லால் குமார தெரிவித்தார்.

மீரியாபெத்தை மண்சரிவில் கிட்டத்தட்ட 300 பேர் வரையில் காணாமறபோயிருக்கலாம் என்று அதிகாரிகள் கூறியிருந்தனர்.

சில நாட்களுக்குப் பின்னர், அந்த எண்ணிக்கை 100 வரை இருக்கலாம் என்று கூறப்பட்டது. எனினும் பின்னர் 40 இற்கும் குறைவானவர்கள் என்று கூறப்பட்டது.

'பெருமளவிலானோர் மண்சரிவில் புதையுண்டு போனார்கள். அதனால் தகவல்களை வழங்கக்கூடிய, வாக்கு மூலம் அளிக்கக்கூடியவர்கள் குறைந்தளவானோர் தான் இருந்துள்ளார்கள். பின்னர் நடந்த விசாரணைகளின் முடிவில் ஏற்பட்டுள்ள தெளிவுகளின் படித்தான் இப்போதுள்ள எண் ணிக்கைகளுக்கு நாங்கள் வந்துள்ளோம்' என்றார், இலங் கையின் பேரிடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர்.

பேரிடர் முகாமைத்துவ அமைச்சின் 'பொறுப்பு' மலையக மக்களின் தொகை கணக்கு விபரங்களை அதிகாரிகள் முறையாக வைத்திருப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன.


'அதிகாரிகளிடம் இந்த மக்களின் சரியான தொகை தொடர்பான புள்ளிவிபரங்கள் சீராக இருக்கவில்லை என்பதைத் தான் இந்த சம்பவம் காட்டுகின்றது. அழிவுகள் நடக்கக்கூடிய அபாயம் இருக்கின்ற இடங்களில் மக்களின்தொகை விபரங்களை மதிப்பிடுவதற்கு உங்களின் அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுமா?' என்று பி.பி.சி வினவியது.

'கிராமசேவை உத்தியோகத்தர்களும் தேர்தல் அதிகாரிகளும் உள்நாட்டு அலுவல்கள் துறையினரும் தான் மக்கள் தொகை தொடர்பான தகவல்களை திரட்ட வேண்டும். இங்கு இருப்பது மக்கள் தொகை கணக்கு விபரங்கள் தொடர்பான பிரச்சினை இல்லை. கணக்கெடுக்கப்பட வேண்டிய நபர்கள் தம்மை பதிவுசெய்ய முன்வராததும் அந்த நபர்கள் காணாமற்போயிருப்பதும் தான் இங்கு பிரச்சினை' என்றார் சரத்லால் குமார.

மலையக பிரதேசங்களில் வாழும் மக்கள் தொடர்பான விபரங்கள் அந்த பிரதேசத்து கிராமசேவை உத்தியோகத்தர்களால் முறையாக பேணப்படவில்லை என்பது தான் இங்கு தெளிவாகத் தெரிகின்றது. இந்த மக்கள் ஏதாவது அழிவுக்கு முகம்கொடுத்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருப்பது பேரிடர் முகாமைத்துவ அமைச்சு தான். உங்களின் அமைச்சுக்கும் இந்த மக்களின் தொகை தொடர்பான கணக்கெடுப் புகளை ஒருங்கிணைக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது தானே' என வினவப்பட்டபோது,

'எதிர்காலத்தில் நீங்கள் முன்வைக்கின்ற யோசனையை நடைமுறைப்படுத்த வேண்டி வரும். இயற்கை அழிவு ஆபத்துக்கள் இருக்கின்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் புள்ளிவிபரங்கள் திரட்டப்பட வேண்டும். அதற்காக எங்களின் அமைச்சரும் அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறு சிறப்பு கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்' என்றார் பேரிடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர்.

## மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம் மாதுளுவாவே தேரர் சூளுரை



(கொழும்பு)

பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கும் பொது வேலைத் திட்டம் சம்பந்தமான உடன்படிக்கையில் கையெழுத்திடும் நிகழ்வில் அம்புலன்ஸ் வண்டியில் சென்றாவது கலந்து கொள்ள போவதாக மாதுளுவாவே சோபித தேரர் கூறியுள்ளார்.

அத்துடன் மிரட்டல்களுக்கு அச்சுறுத்தல்களுக்கும் தான் அஞ்சப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக தனியார் மருத்துவனையில் சிகிச்சை பெற்று வரும் சோபித தேரரின் நலமறிய சென்றிருந்த தினியாவல பாலித தேரரிடம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை திட்டமிட்டப்படி இன்று மதியம் பொது வேட்பாளர் தொடர்பான பொது வேலைத்திட்டம் குறித்த உடன்படிக்கை கையெழுத்திடப்படும் என நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் முக்கியஸ்தரான சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

## இசை வேள்வி இன்று இறுதிநாள்

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும் "ஸ்ரீராமநாம காணாமிர்தம்" இசைவேள்வி இறுதிநாள் நிகழ்வு இன்று மாலை 5.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காமணி மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பத்மஸ்ரீ.கத்ரிகோபால்நாத் தலைமையில் தமிழ்நாட்டுக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் இசைப்பேரரங்கு நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வுகளை பிரபல நாதஸ்வர வித்துவான்களான வி.கே.பஞ்சமூர்த்தி, எஸ்.பி. பால முருகன், ப.குமரன், வி.சித்தார்த்தன்,கு.நாகதீபன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர்.

செல்வி தனசொரூபி நவரத்தினம் கடவுள் வாழ்த்து இசைப்பார் தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள கத்ரிகோபால்நாத் ஸ்ரீமதி ஏ.கன்னியாகுமரி, டில்லி சாய்ராம் அநிருத் ஆத்ரேயா ஆகியோர் இசைப்பேரரங்கில் கலந்து கொள்வர். (10)

## ஜனாதிபதி மகிந்த நேபாளம் விஜயம்

நேபாளத்தில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சார்க் நாடுகளின் தலைவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி நேபாளத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இதன்படி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ ஷெரீப், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஸ்ரப் கானி, பூட்டான் பிரதமர் சேரிங் டப்காய், மாலைத்தீவு ஜனாதிபதி அப்துல்லா யேமன் ஆகியோர் வருகை தரவுள்ளதாக நேபாள ஊடக செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

18ஆவது சார்க் மாநாடு நோபாள தலைநகர் காத்மண்டுவில் இம்மாதம் 26ம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரக்கறி விலைகள் கிடு கிடு உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் பெய்து வரும் பருவமழையைத் தொடர்ந்து வெங்காயம் மற்றும் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.


திருநெல்வேலி சந்தையில் 60-70 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வந்த சின்ன வெங்காயம் தற்போது 100 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது பாகற்காய் கிலோ 200 ரூபாவாகவும் பயிற்றங்காய் கிலோ 160 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை முட்டையின் விலை 11 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தகது.(10)

03. அதிக ஆண்டுகள் உயிர் வாழும் பிராணி எது?

1) முதலை 2) கடலாமை 3) கடற்குதிரை

04. விவசாயி பயன்படுத்தப்படும் உபகரணம் எது?



05. வெயிலில் காய விடுவதன் மூலம் சுத்தமாக்கக்கூடிய பொருள் எது?

1) காலுறை 2) தலையணை 3) கைக்குட்டை

06. பின்வருவனவற்றுள் விலங்குணவு எது?

1) பாற்கட்டி 2) வினாகிரி 3) சீனி

07. வாழையிலையில் உணவு போட்டு உண்ணும் பழக்கமுடையவர்கள் யார்?

1) பௌத்தர்கள் 2) இஸ்லாமியர்கள் 3) இந்துக்கள்

08. செய்திகளை பரிமாற்றம் செய்வதற்காக ஆரம்பகாலத்தில் பயன்படுத்தப்பட்ட பறவை

1) புறா 2) மைனா 3) கிளி

09. பின்வருவனவற்றில் ஒளியும், ஒலியும் சேர்ந்த சாதனம் எது?

1) வானொலி 2) பத்திரிகை 3) தொலைக்காட்சி

10.  இந்த வாழ்விடத்தை அமைக்கும் பிராணி எது?

1) நெற்குருவி 2) தேன்சிட்டு 3) தூக்கணாங்குருவி

11. இலங்கையில் அதிகளவு வாழும் இனத்தவர்கள் யார்?

1) சிங்களவர் 2) தமிழர் 3) முஸ்லிம்கள்

12. வருடம் முழுவதும் காய்க்கும் பழவகை எது?

1) றம்புட்டான் 2) மாம்பழம் 3) வாழை

13. கடலை அண்டிய மாவட்டம் எது?

1) பதுளை 2) பொலனறுவை 3) மட்டக்களப்பு


14. பின்வருவனவற்றில் நீரில் அமிழும் பொருள் எது?

1) பென்சில் 2) ரெஜிபோம் 3) கண்ணாடித்துண்டு

15. கிரிக்கெட் போட்டியில் ஒரு ஓவரில் (பந்துப்பரிமாற்றம்) வீசப்படும் பந்துகள் எத்தனை?

1) 6 பந்துக்கள் 2) 5 பந்துக்கள் 3) 8 பந்துக்கள்

16. எல்லே விளையாட்டை தெரிந்து கோடிடுக



இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்



## தரம் 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

I

1 மணி



(01). மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01. பின்வருவனவற்றுள் காய்களை உருவாக்கும் தாவரம் எது?

1) மல்லிகை 2) மா 3) செவ்வரத்தை

02. வீட்டை அழகுபடுத்த வளர்க்கப்படும் தாவரம் எது?

1) குரோட்டன் 2) பலா 3) ஆமணக்கு

03. கத்தரிப்பூவின் நிறம் யாது?

1) வெள்ளை 2) மஞ்சள் 3) ஊதா

04. கிளைகளற்ற தாவரம் எது?

1) முதிரை 2) வேம்பு 3) பனை

05. நிலத்தில் படரும் கொடிவகை எது?

1) பூசனி 2) வெற்றிலை 3) திராட்சை

06. முட்களை கொண்ட செடி எது?

1) செவ்வந்தி 2) தக்காளி 3) ரோஜா

07. உணவு தயாரிக்கப்பயன்படுத்தப்படும் இலை வகைகள் எவை?

1) வல்லாரை, ஆடாதோடை 2) வேம்பு, பப்பாசி 3) அகத்தி, முருங்கை

08. வீட்டில் வாழும் நன்றியுள்ள பிராணி எது?

1) பூனை 2) நாய் 3) கிளி

09. இலங்கையின் தேசியப்பறவை எது?



10. ஆறு கால்களை கொண்ட பிராணிகள் எவை?

1) நுளம்பு, தேனீ 2) சிலந்தி, உண்ணி 3) குளவி, தேள்

11. பச்சை நிறப்பூச்சி எது?



12. பொருளாதார நன்மை தரும் பிராணிகள் எவை?

1) ஒட்டகம்,அணில் 2) கோழி,தேனீ 3) ஆடு,புறா

13. மரப்பொந்தினுள் வாழும் பிராணி எது?

1) ஆந்தை 2)கொக்கு 3) தூக்கணாங்குருவி

14. மனிதனுக்கு தீங்கு விளைவிக்க கூடிய பிராணிகள் எவை?

1) மயில்,வண்ணத்துப்பூச்சி 2)மாடு,கிளி 3) நுளம்பு,எலி

15. பாற்புட்டியை சுத்தம் செய்யும் முறை யாது?

1) குளிர்நீரில் கழுவுதல் 2) சவர்க்காரமிட்டுக்கழுவுதல் 3) சூடுநீரில் கழுவுதல்

16. இருமல்,தும்மல்,கொட்டாவிவிடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் நாம் பயன்படுத்த வேண்டியது?

1) கைக்குட்டை 2) துவாய் 3) படுக்கைவிரிப்பு

17. நீரில் வாழும் தாவரம் எது?

1) நாகதாளி 2)கற்றாளை 3) தாமரை

18. உணவிற்கு பயன்படுத்தப்படும் வித்து எது?

1) உழுந்து 2) புளி 3) ஆமணக்கு

19. மிகவும் வேகமாக ஓடக்கூடிய பிராணி எது?

1) குதிரை 2)தீக்கோழி 3) சிறுகதை

20. பித்தளை பாத்திரங்களை மினுக்குவதற்கு மிகவும் பொருத்தமானது?

1) சாம்பல் 2) பழப்புளி 3) சவர்க்காரம்


21. மனித இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி எது?

1) புலிமுகச்சிலந்தி 2) தேனீ 3) நுளம்பு

22. ஒரு வித்து மட்டும் உள்ள பழம் எது?

1) தோடை 2) பலா 3) றம்புட்டான்

23. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?

24. கீரை வகைகளை கொண்ட விடைத்தொகுதி எது?

1) அகத்தி,தூதுவளை 2) வற்றாளை,முள்ளங்கி 3)லீக்ஸ்,கரட்

25. கண்களை மூடாமல் நித்திரை செய்யும் பிராணிகள் எவை?

1) குதிரை,ஒட்டகம் 2) பாம்பு,மீன் 3) புறா,குயில்

(02) சரியாயின் (√)சரி எனவும் பிழையாயின் (x)எனவும் அடையாளமிடுக.

1) இலங்கைக்கு அண்மையில் உள்ள நாடு இந்தியாவாகும் ( )

2) தினமும் இரவுவானில் சந்திரனைக் காணலாம் ( )



03. காகம் கூடுகட்டி முட்டையிடும் பறவையாகும் ( )

04. வண்ணத்துப்பூச்சி பூக்களில் தேன் குடிக்கும் ( )

05. கோப்பிவித்து பானம் தயாரிக்கப்பயன்படுத்தப்படும் ( )

06. சிங்கம் தாவரங்களை மட்டும் உண்ணும் ( )

07. இலையான் மூலம் எமக்கு நோய் பரவுகின்றது ( )

08. வானொலி மூலம் பல்வேறு நிகழ்ச்சிகளை கேட்கலாம் ( )

09. அரிவாள் உலோகத்தினால் செய்யப்பட்ட உபகரணமாகும் ( )

10. காகம் மரப்பொந்தினுள் வாழும் ( )

(03).பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

11. துணியை வெட்டுவதற்கு ............................... பயன்படுகிறது (மண்வெட்டி,கத்தரிக்கோல்)

12. நாம் வீதியில் ..................... (வலது,இடது) பக்கமாக செல்ல வேண்டும்

13. உடலை ஓட்டினுள் மறைத்துக் கொள்வது ............................ (எலி,நத்தை)

14. கொப்புகள் அற்ற மரம் ............................. (வேம்பு,பனை)

15. வலைபின்னி வாழும் பிராணி ............................... (சிலந்தி,தேனீ)

16. ஆணியை சுவரில் அறைவதற்கு பயன்படுவது ........................ (சுத்தியல்,குறடு)

17. கூடுகட்டத் தெரியாத பறவை ..............................(கொக்கு,குயில்)

(04).தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| 18. கிழங்குவகை | அறுகு |
| 19. காய்கறி | நெல் |
| 20. கொடிவகை | வெண்டி |
| 21. தானியம் | வற்றாளை |
| 22. புல் | வெற்றிலை |

(05).சுருக்கமான விடை தருக.

23.குட்டியீன்று பால்கொடுக்கும் பறவை எது? ..................................

24. விளையாட்டுக்கு பயன்படுத்தப்படும் வித்துக்கள் இரண்டு தருக?

1.............................. 2.......................

25. நாம் வீட்டில் பயன்படுத்தப்படும் பொருட்கள் இரண்டு தருக?

1............................ 2..........................

(06).மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01. நீர்நிலைகளில் உள்ள மீன்களை உண்ணும் பறவை எது?

1) கழுகு 2) கொக்கு 3) கோட்டான்

02. பாய்ந்து செல்லும் பிராணி எது?

1) நண்டு 2) உடும்பு 3) முயல்





நெல்லியடி பிரதேசத்தில் ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வளம் பெறுவோம் திட்டத்தின் கீழ் மரம்நடுகை நிகழ்வு நேற்று முன்தினம் மத்தொனி கிராமத்திலுள்ள வெல்லன் விநாயகர் கோயிலில் நடைபெற்றது. இதில் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி சுமித்பெரகரா பருத்தித்துறை 551 ஆம் படைப்பிரிவு கேணல் சமரக்கோன், ஈ.பி.டி.பி. கரவெட்டி உதவிப் பொறுப்பாளர் எஸ்.முரளி உள்ளிட்ட பலர் மரம் நாட்டி வைத்தனர். (18)

## புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒத்திவைப்பு

அடுத்த ஜனாதிபதி தேர்தலின்போது, இணைந்து செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் படுவது எதிர்வரும் 19ஆம் திகதி வரை தள்ளிவைக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானத்துக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் வண. மாதுலுவாவே சோபித்ததேரர், கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, இன்று கைச்சாத்தப்பட விருந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இவ்வாறு 19ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

# தமிழர் பண்பாட்டில் ஏற்படும் மாற்றம்

# சமூகத்தை பாதாளம் நோக்கி தள்ளுகிறது

### பிரபல எழுத்தாளர் திருமதி மகேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழர் பண்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் எமது சமூகத்தைப் பெரும் ஆபத்து நிலை நோக்கி கொண்டு செல்கின்றது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு சமூக ஆர்வலர்கள் எமது மக்களிடையே குறிப்பாக இளையதலைமுறையினரிடையே பண்பாட்டு விழிப்புணர்வினை ஏற்படுத்த முன்வர வேண்டும்.**

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஈழத்தின் பிரபல சிறுகதை எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன்.

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் அண்மையில் நடாத்தப்பட்ட பண்பாட்டு விழிப்புணர்வுச் செயலமர்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருமதி கோகிலா மகேந்திரன் தொடர்ந்து தெரிவித்ததாவது,

பண்பாடு என்பது குறிப்பிட்ட ஓர் இடத்தில் குறித்த காலப் பகுதியில் வாழும் ஒரு சமூகத்தின் இருப்பு நிலையைக் குறித்து நிற்கிறது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் மொழி சமய நம்பிக்கைகள் நடை, உடை, பாவனை பழக்கவழக்கங்கள், கலை, கலாசாரப் பின்னணி போன்றவை பரம்பரை பரம்பரையாக அடுத்து வரும் சந்ததிக்குக் கடத்தப்படும் போது சில மாற்றங்கள் ஏற்படத்தான் செய்யும் ஆனால் சமூகத்திற்கு ஒவ்வாத மாற்றங்களை ஏற்றுக் கொள்வது பொருத்தமாகாது.

மரவுரி தரித்து அரைகுறையுமாக ஆடை அணிந்த மனிதன் இன்று முழுமைக்கு வந்தபின் மீண்டும் அரைகுறை ஆடைக்குத் திரும்புவது ஏற்றுக்கொள்ளத்தக்க மாற்றம் எனக் கொள்ள முடியாது.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம்மவர்களின் பண்பாட்டு மாற்றங்கள் இங்குள்ளவர்களிடையேயும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. அவர்கள் அங்கு பெரும் கஷ்ரப்பட்டு உழைக்கும் பணம் இங்கு நம்மவர்களின் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்படுத்துகிறது.

இன்றை எமது சமூகத்தில் அதிகரித்து வரும் மதுப்பாவனை போதைப்பொருள் பாவனை, பாலியல் வக்கிரங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமானால் இவைபற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்களில் குறிப்பிட்ட சதவீத உயர்தர வகுப்பு மாணவர்கள் மது அருந்துகிறார்கள் போதைதரும் பாக்குவகை மற்றும் ரெட்புல் போன்ற பானவகைக்கு அடிமைகளாகிவிட்டனர்.

இத்தகைய தீய பழக்கங்களில் இருந்து எமது இளையதலைமுறையினரை மீட்டெடுப்பதற்கு ஆசிரியர்களும் பெற்றொர்களும் முன்வரவேண்டும். தமக்கு முன் பின் தெரியாதவர் களை உறவினர் என்று அழைத்து அவர்களுடன் பழகுவதை பிள்ளைகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (10)

# “வாழ்வாதார” மேம்பாட்டிற்காக ‘சோஆ’ நிறுவனம் உதவி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சோஆ நிறுவனம் சுயதொழில் உதவிகளை வழங்கவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்கும், மன்னார் மாவட்டத்தில் மடு,மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று,ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் வழங்கவுள்ளது.ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தலா 50 பேர் வீதம் இந்த சுயதொழில் நன்கொடை வழங்கப்படவுள்ளது.

இவ் வருட இறுதிக்குள் இவ்வாறு மொத்தம் 250 பேருக்கு தலா 39 000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

வட மாகாண சமூக சேவைகள திணைக்களத்தின் சமூக சேவைகள் அதிகாரிகள் பயனாளிகளை தெரிவு செய்து மதிப்பீடு செய்து சோஆ நிறுவனத்திடம் பட்டியலை வழங்கி உள்ளனர்.

பிரதேச செயலர்களின் வழிகாட்டலின் மூலம் பெறப்பட்ட இப் பயனாளிகள் பட்டியலில் 50 பேரை தெரிவு செய்து பயனாளிகளுக்கு சுயதொழில் காசோலைகளை விநியோகிக்கும் பணிகள் மிக விரைவாக நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களைக் கொண்ட வறிய குடும்பங்களே இந்த சுயதொழில் உதவித் தொகையைப் பெற உள்ளனர்.

இதனால் இந்த பிரிவுகளில் யுனிசெவ் நிறுவன நிதியின் மூலம் வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள சுயதொழில் உதவிகள் வழங்கப்பட மாட்டாது.

இவை தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு யுனிசெவ் நிறுவன நிதி மூலமாக தலா 36000 ரூபா சுயதொழில் நன்கொடை வழங்கப்படவுள்ளது.

(90)

# கட்டாக்காலி மாடுகளால் அழிவடையும் நெற்பயிர்கள்

கரணவாய் கிழக்கு கிராய் பகுதியில் நெற்செய்கைகள் மேற்கொண்ட விவசாயிகள் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் நெற்பயிர்கள் அழிவடைந்து தாம் நஷ்டத்தை எதிர் நோக்கும் நிலை ஏற்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக விட்டுவிட்டு பெய்யும் மழையினால் போதியளவு நீர் வயல்களுக்கு கிடைக்காமல் உள்ளதுடன் நெற்பயிர்கள் நீரின்றி காய்ந்து காணப்படுகின்றன. இவற்றை கட்டாக்காலி மாடுகள் வந்து இரையாக்குவதால் முற்றாக நெற்பயிர்கள் நாசமாவதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாடுகளை வளர்க்கும் பண்ணையாளர்கள் தமது மாடுகளை கட்டி வைத்து வளர்க்குமாறும் வயல்களுக்கு அருகில் கட்டாது வெளிப்பிரதேசங்களில் மாடுகளை கொண்டு சென்று கட்ட வேண்டும் எனவும் இதன்மூலம் வயல் நிலங்கள் பாதுகாக்கப்படும் எனவும் இவ் விடயத்தில் பண்ணையாளர்கள் சிந்தித்து செய்யப்பட வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்விடயத்தில் கமக்கார அமைப்புக்களும் கிராம சேவையாளருக்கு தெரியப்படுத்தி உரியநடவடிக்கை எடுக்க ஆவண செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# கலைஞர்கள் பலரின் திறமைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும்

### யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள பல கலைஞர்கள் இலைமறை காயாய இருக்கின்றார்கள். அவர்களுடைய திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான களங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என்பதற்காகவே கலாசார போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இதன் நோக்கம் பிரதேசங்களிலுள்ள கலைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதாகும் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலகம் இணைந்து நடாத்திய மாவட்டமட்ட கலைஇலக்கிய போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது . நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில

வருடா வருடம் பிரதேச மாவட்ட மட்டங்களில் கலை நிகழ்ச்சிப் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கி வருகின்றோம். இதன் நோக்கம் பிரதேசங்களிலுள்ள கலைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதாகும். மேலும் பிரதேச ரீதியில் கலாசாரத்தை பேணும் நோக்கில் பல மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சில மையங்கள் உருவாகப்பட்டு வருகின்றன. இந்த கலாசார மையங்களில் இந்து சமயத்தை மட்டுமன்றிஆன்மீகம் யோகாசனம் போன்ற பயிற்சிகள் நடத்துவதற்கும ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட மட்டத்தில் இந்நிகழ்வுகள் ஏற்படுத்தப்படாவிட்டாலும் பிரதேச மட்டத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.



யாழ். மாவட்டத்தில் கலாசார பேரவை அங்குரார்ப்பணம் மேற்கொள்ள வேண்டும். மேலும் புதிய அங்கத்தவர்களை உருவாக்கி பாரிய திட்டங்களை உருவாக்கி செயற்படுத்த வேண்டும் என்பது மாவட்ட செயலாளருடைய ஆவாலாகவுள்ளது. அதற்கு கலைஞர்களின் கலைகளோடு சேர்ந்த ஒத்துழைப்பு அவசியமாகும். யாழ். மாவட்டத்திலுள்ள கலைஞர்கள் உரிய முறையில் பேணப்படவேண்டியவர்கள் என்றார். (63)


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ரஷ்யா மீது கண்டனக்கணைகள்
## ஜீ -20 மாநாட்டில் காரசாரம்



(ரஷ்யா)

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் ஜீ.20 மாநாட்டில் ரஷ்யா கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

உக்ரைன் விடயத்தில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பில், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிர்ப்பை வெளியிட்டன.

ரஷ்யா உக்ரைனிலிருந்து வெளியேற வேண்டும் என்று, கனடாவின் பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம் ரஷ்யாவின் செயற்பாட்டில் மாற்றம் ஏற்படா விட்டால், மேலும் பல பொருளாதார தடைகளுக்கு முகம் கெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமரூன் எச்சரித்துள்ளார்.

அதேநேரம், உக்ரைனில் ரஷ்யா முன்னெடுக்கும் செயற்பாடுகள், உலகத்துக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மீனவர்களின் தூக்குத்தண்டனை விவகாரம்
## இந்திய – இலங்கை அதிகாரிகள் ஆராய்வு



மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழகத்தை சேர்ந்த 5 மீனவர்களை விடுவிப்பதற்கான வழிமுறைகளை இலங்கை அரசு தீவிரமாக பரிசீலித்து வருவதாக ஜனாதிபதி செய்தி தொடர்பாளர் மோகன் சமரநாயரே தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,


தமிழக மீனவர்கள் 5 பேரையும் விடுவிப்பதற்கான வழிமுறைகள் குறித்து உயர்நிலையில் விவாதிக்கப்பட்டு வருகிறது. அனைத்து கோணங்களிலும் இந்த விவகாரம் ஆராயப்பட்டு வருகிறது. இன்னும் ஓரிரு நாட்களில் இது தொடர்பாக முடிவெடுக்கப்படலாம்.

அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைப்பது, இந்தியாவுடன் 2010 ஆம் ஆண்டில் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அவர்களை தாய் நாட்டுக்கு அனுப்பி வைப்பது, கடைசியாக அவர்களை ஜனாதிபதியை மன்னிப்பு மூலம் விடுவிப்பது என்ற தொடர்ச்சியான நடவடிக்கை குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தொடர்பான அம்சத்தையும் அரசு பரிசீலித்து வருகிறது. முதலில் மரண தண்டனைக்கு எதிரான மேல்முறையீடு வாபஸ் பெறப்பட வேண்டும். ஏனெனில் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போது தண்டனை குறைப்பு அல்லது விடுதலை குறித்து முடிவெடுக்க முடியாது.

மீனவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மீதான விளைவுகள் குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது. ஏனெனில் இது அத்துமீறி மீன் பிடித்த குற்றசாட்டு அல்ல. போதைக் கடத்தல் குற்றம் என்றார் அவர்.

# தீவிரவாதிகளுக்கு பின்னடைவு
## எண்ணைக்குதம் ஈராக் படைகளின் வசம்



ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள பகுதிகளை கைபபற்றி இஸ்லாமிய நாடு உருவாக்க ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் முயற்சி செய்து வருகிறார்களா.

ஈராக், சிரியாவில் பல நகரங்களை ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து இருக்கிறார்கள்.

தீவிரவாதிகளிடம் சிக்கி உள்ள நகரங்களை மீட்க ஈராக் இராணுவம் போரிட்டு வருகிறது.

ஈராக்கில் மிகப்பெரிய எண்ணை சுத்திகரிப்பு நிலையம் பைஜி நகரில் இருக்கிறது. இந்த

நகரை தீவிரவாதிகள் கைப்பற்றி இருந்தார்கள். இதை மீட்க இராணுவம் தீவிரவாதிகளுடன் கடுமையாக சண்டையிட்டது.

கடந்த இருவாரங்களாக இருதரப்பினர் இடையே மோதல் நடந் தது. இதில் இராணுவம் பைஜி நகரை தீவிரவாதிகளிடம் இருந்து மீட்டது. இராணுவத்தின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் ஓட்டம் பிடித்தனர்.

மீட்கப்பட்ட பைஜி நகரில் உள்ள எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து தான் 50 சதவீத எண்ணை ஈராக்குக்கு சப்ளை செய்யப்படுகிறது. இதனால் முக்கியமான இந்த நகரை இராணுவம் மீட்டது மிகப்பெரிய வெற்றியாக கருதப்படுகிறது.

# இதுவரை வெளிவராத இரகசியம்
## ஜெயலலிதாவின் வழக்கின் சுவாரசியம்
### புத்தக வடிவில் வெளிவந்ததால் பரபரப்பு



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாக ஜெயராமின் சொத்துக்குவிப்பு வழக்கில் ஆஜரான அரசு தரப்பு வக்கீல் ஆச்சார்யா, வழக்கில் தாம் கண்ட பல்வேறு அனுபவங்கள் பற்றி புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

"ஆல் பிரம் மெமர்" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இந்த புத்தகத்தில் அவர் கூறியிருப்பதாவது:

ஜெயா வழக்கில் ஆஜராகும் போது நான் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்தேன். பல மிரட்டல்கள் எனக்கு வந்தது. கர்நாடகாவில் ஆளும் கட்சியாக இருந்த பா.ஜ. மூலமும் எனக்கு நெருக்கடிகள் வந்தன.

இவரது வழக்கில் ஆஜராகும் போது எனக்கு பல்வேறு அனுபவங்கள் கிடைத்தது. ஒரு வழக்கில் எப்படியெல்லாம் வாய்தா வாங்க முடியும் என்பதை பார்க்க முடிந்தது. வாயதா குறித்து ஒரு புத்தகமே ஒத்தி வைப்பு சட்டம் என்ற பெயரில் வெளியிடலாம்.

இவ்வாறு வெளியிட்டால் பல குற்றவாளிகள் தப்பிக்க வாய்ப்பு ஏற்பட்டு விடும். இவ்வாறு கூறியுள்ளார்.

ஆச்சார்யா, ஜெ., வழக்கில் ஆஜரான பல்வேறு அரசு வக்கீல்களில் இவரும் ஒருவர். பல நெருக்கடிகளை சுட்டி காட்டி இந்த வழக்கில் இருந்து விலகுவதாக இந்த பணியில் இருந்து தாமாக வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கின்னஸ் சாதனை படைத்த வியக்கவைக்கும் மணற்சிற்பம்



மணலினால் தத்ரூபமான சிற்பங்களை செய்து வியக்க வைக்கும் கலைஞர்கள் பல நாடுகளில் உள்ளனர். பிரேஸிலில் புதிய கின்னஸ் சாதனைக்காக பாரிய மணற்சிற்பமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பிரேஸிலின் நிட்டோரி நகரில் நிர்மாணிக்கப்படும் இந்த சிற்பத்தின் உயரம் 12 மீற்றர்கள் (39 அடி). பிரேஸிலில் தனது உற்பத்திகளை பிரபலமாக்க விரும்பிய இரு அமெரிக்க நிறுவனங்களினால் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்நிறுவனங்களின் சார்பில் அமெரிக்காவைச் சேர்ந்த கலைஞரான ருஸ்டி குரொப்ட் இந்த பாரிய மணற் சிற்பத்தை நிர்மாணித்துள்ளார்

# பெண் தீவிரவாதி சுட்டுக்கொலை

ரஷ்யா நாட்டைச் சேர்ந்தவர் சமந்தா. "வயிட் விடோ" என்றழைக்கப்பட்ட இந்த விதவை உலகிலேயே அதிகமாக தேடப்படும் பெண் தீவிரவாதியாக கருதப்பட்டார்.

இவர் தலைக்கு 6 1/2 இலட்சம் டொலர் பரிசு பணம் தருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இவர் உக்ரைனில் பிரிவினை வாதிகளுடன் சேர்ந்து போரிடுவதாக தெரியவந்தது.

அவரை ரஷ்ய இராணுவ வர்ர்கள் சுட்டுக் கொன்று விடடதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாண்டவர் மீண்டெழுந்த அதிசயம்
## இது சேலத்தில் நடந்த சம்பவம்



போலந்து நாட்டின் ஒஸ்ட்ரோலுபெல்ஸ்கி என்ற இடத்தில் வசித்து வந்தவர் ஜனினா கோல்கிவ்ஸ் (வயது 91). முதுமை காரணமாக கடந்த சில தினங்களாக சாப்பாடு எதுவும் சாப்பிடாமல் இருந்த அவர் கடந்த 6 ஆம் திகதி உடல் அசைவற்று கிடந்தார். இதனால் அவர் இறந்து விட்டதாக உறவினர்கள் கருதினர்.

பின்னர் ஒரு மருத்துவரை அழைத்து வந்து பரிசோதித்தனர். அப்போது ஜனினா இறந்து விட்டார் என்று கூறிய டாக்டர் அதற்கான சான்றிதழையும் வழங்கினார். இதனால், உறவினர்கள் இறுதிச் சடங்குக்கு ஏற்பாடு செய்ததுடன் அவரது உடலை, உடல் குளிர்சாதன பெட்டிக்குள் வைத்திருந்தனர்.

மயானத்தில் இறுதிச் சடங்கிற்கான அனைத்து வேலைகளும் நடந்து கொண்டிருந்த போது, அவர் உடல் அசைவது போன்று தெரிந்தது. உடனே, குளர்சாதன பெட்டியை திறந்து பார்க்கும் போது அவர் உயிருடன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இறந்ததாக நினைத்த அவர் சுமார் 11 மணி நேரம் கழித்து உயிர்பிழைத்ததால் அனைவரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர். பின்னர் அவரை வீட்டுக்கு கொண்டு சென்றனர்.

உயிருடன் இருந்தவருக்கு டாக்டர் இறப்பு சான்றிதழ் கொடுத்தது பற்றி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆக்கத்திறன் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆக்கத்திறன் செயல் விருத்தி அரங்க பயிற்சிப்பட்டறை நிகழ்வு தெல்லிப்பளை பிரதேச செயலக சிறுவர் முன்பள்ளி பிள்ளை விருத்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இவ் ஆக்கத்திறன் செயல் விருத்தி அரங்கப் பயிற்சிப்பட்டறை நிகழ்விற்கு பிரதம வளவாளராக புத்தாக்க அரங்க இயக்கத்தின் இயக்குநரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமாகிய எஸ்.ரி.குமரன் வளவாளர்களாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் எஸ்.ரி.அருள்குமரன், ரிதுசன் சிந்துஜன், குயின்ரன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிப் பட்டறையினை திறம்பட வழிநடத்தினர்.

இப்பயிற்சிப்பட்டறையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆக்கத்திறன் விருத்தி செயற்பாடுகள், கற்பித்தல் செயற்பாடுகள், மகிழ்வூட்டல் நிகழ்வுகள், முன்பள்ளி சிறுவர்களுக்கான ஆடல், பாடல் நிகழ்வுகள் என்பன பயிற்சிகளாக வழங்கப்பட்டன.

இப்பயிற்சிப்பட்டறையில் 40 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

பயிற்சிப்பட்டறை மிகவும் பயனுள்ள முறையில் அமைந்ததுடன், முன்பள்ளி கற்பித்தல் சார் புதிய விடயங்களினை கற்றுக்கொள்ள முடிந்ததாகவும் தெரிவித்தனர். (63)

# 15 ரேடியேட்டர்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சுன்னாகம் நகரப் பகுதியில் அமைந்துள்ள ரேடியேட்டர் விற்பனை நிலையமொன்றுக்குள் கடந்த சனிக்கிழமை இரவு புகுந்துள்ள கொள்ளையர்கள் சிலர், அங்கிருந்த 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான 15 ரேடியேட்டர்களைக் கொள்ளையிட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வியாபார நிலையத்தின் முன்கதவு உடைக்கப்பட்டே இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் நேற்று குறித்த விற்பனை நிலையத்தின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதேவேளை, சுன்னாகத்திலுள்ள உணவகம் ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய மோட்டார் சைக்கிளொன்று சனிக்கிழமை இரவு திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் கூறினர்.

மோட்டார் சைக்கிளை உணவகத்துக்கு வெளியில் நிறுத்திவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் காணாமற்போயுள்ளதாக அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தி வருவதாக சுன்னாகம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பொது வேட்பாளர் தெரிவிற்குப் பதில் இசை நாற்காலிப் போட்டிகள்

## எதிர்க்கட்சிகளை கிண்டலடிக்கும் ஜனாதிபதி



(கொழும்பு)

பொது வேட்பாளர் யார் என்பதை தெரிவு செய்ய முடியாது எதிர்க்கட்சிகளின் கூட்டணி இசை நாற்காலி போட்டியை நடத்தி வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

12 ஆயிரம் பேருக்கு காணி உறுதியை வழங்கும் நிகழ்வு குருணாகல் மாளிகா மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்து கொண்டு பேசும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த முறை ஜனாதிபதியாக தெரிவான நாள் முதல் நான் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகி வருகிறேன்.

எதிர்க்கட்சிகளுக்கு தயாராக காலத்தை வழங்கவே முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தல் பற்றி அறிவிக்கப்பட்டது.

எமது பிக்கு ஒருவரும் இசை நாற்காலியில் அமர இசை ஒலி பரப்பு செய்து சுற்றி வருகிறார்.

எதிர்க்கட்சிகளின் மிகப் பெரிய இரட்சகர்களாக புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர்.

நாட்டில் நடக்கும் சாதாரணமான சம்பவங்களை பெரிதுபடுத்தி வெளிநாடுகளுக்கு காட்ட இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

அரபு புரட்சியை பற்றி பேசுகின்றனர். இதன் மூலம் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட கொடூரமான கொலைகள் பற்றி அவர்கள் பேசுவதில்லை.

இது குறித்து நாட்டில் உள்ள முஸ்லிம் தலைவர்களும் அமைதியாகவே இருந்து வருகின்றனர்.

இனவாத, மத வாத மற்றும் குலவாத பேதங்களை ஏற்படுத்தி யுத்தத்தில் செய்ய முடியாமல் போனதை செய்ய முயற்சிப்பதுடன் அமைதியாக இருக்கும் மக்களை தூண்ட முயற்சிக்கின்றனர் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

# எதிர்க் கட்சிகளின் வேட்பாளர் அரசுடன் தொடர்புபட்டவரா?

## வதந்தி என்கிறார் விமல்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டவர் இல்லை என்பதை வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் போது அறிந்து கொள்ளலாம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் வீரவன்ச, பொது வேட்பாளர் அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டவர் என பொய்யான வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் 20 வருடங்களாக நிறைவேறாத ஆசை உள்ளது. அந்த ஆசையினை நிறைவேற்ற ரணிலுக்கும் கருவுக்கும் ஆசையாகவும் பயமாகவும் உள்ளவர்கள் போல் பொது வேட்பாளராக முயற்சிக்கின்றனர்.

ரணிலுக்கு அவர்தான் பொது வேட்பாளரா என்பது அவருக்கே தெரியாது. கருவுக்கும் தெரியாது, சோபித தேரருக்கும் தெரியாது.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் போது முழு நாடும் அந்த வேட்பாளரை அறிந்து கொள்ளும் எனவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெற்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக விதைநெல்லுக்கான கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் அதேவேளை, மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 7,860 விவசாயிகளுக்கு நட்டஈடுகள் வழங்கும் செயற்றிட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளை சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அத்துடன், இங்குள்ள உற்பத்திகள் அதிகரிக்கும் போது அதனூடாக இம் மாவட்ட நெற்செய்கையாளர்கள் ஆகியோரின் தேவைகள், கோரிக்கைகள் கவனம் செலுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

அதன்பிரகாரம் இம்மாவட்டத்திலிருந்து கொழும்பிற்கு விவசாய உற்பத்திகளை எடுத்துச் செல்லும் போது வவுனியா - ஓமந்தை சோதனைச்சாவடியில் இறக்கி சோதனையிடப்படுவதால் மரக்கறி வகைகள் சேதமடைவதுடன் காலதாமதம் ஏற்படும் நிலை தொடர்பில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி மாற்றம் கொண்டு வரப்படும்.

அத்துடன் விவசாயிகளுக்கு மின்விநியோகத்தை வழங்குவதற்கு விசேட நடைமுறையொன்றை செயற்படுத்துவது தொடர்பிலும் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்பதுடன் விவசாயிகளுக்கான நட்டஈடு மட்டுமல்லாமல் அவர்களது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் வகையில் அவர்களுக்கான முதலீடுகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

ஒட்டுமொத்தத்தில் மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இடர்பாடுகளுக்கு மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகாரசபைக்கு ஊடாக தீர்வுகளை காண்பதற்கான நடவடிக்கைகளும் காலக்கிரமத்தில் முன்னெடுக்கப்படும் அதேவேளை, குறித்த சில விடயங்கள் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து அதன்மூலமும் தீர்வுகள் பெற்றுத்தரப்படும்.

எனவே கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பங்களை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்தி தமது தொழிற்துறைகளை மட்டுமல்லாது தமது வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் முன்னேற்றிக் கொள்ள முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே விவசாயிகளினது பிரச்சினைகள் தேவைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகள் கருத்துக்களையும் அமைச்சர் இதன்போது கேட்டறிந்து கொண்டார்.

மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் நிசாந்தன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஹெல உறுமய...

கூறியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திடம் முன்வைத்த யோசனைகள் தொடர்பில் அந்தக் கட்சிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் பேச்சு நடத்த தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தமது யோசனைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எழுத்து மூலமான நிலைப்பாட்டை ஆராய்ந்து வருவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது குறித்து இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக இன்று பிற்பகல் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாக அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தல்...

வெளியானதன் பின்னரேயே எங்களின் செயற்பாடுகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும்.

தேர்தலுக்கான எதிர்க் கட்சியின் வளங்கள் மிகவும் குறைவாக உள்ளது.

எனவே தேர்தல் அறிவிப்பின் பின்னரே எங்களின் பொது வேட்பாளர் குறித்தும் அறிவிக்கப்படும் என்று ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

## பொய்க்...

தகவல்களை இன்றைய தினம் நான் வெளியிடவுள்ளேன் என அவர் அதில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் குருணாகல் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் நோர்வேயின் முன்னாள் அரசாங்கம் புலிகளுக்கு நிதியுதவி அளித்ததாகவும் முன்னாள் சமாதானத் தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் புலிகளுக்கு பின்னால் நின்றதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, தற்போது எமக்கெதிராக ஜெனிவாவில் சொல்ஹெய்ம் சாட்சியமளிக்க திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசிலிருந்து...

விலகுவதா இல்லையா என்று இரகசியமான வாக்கெடுப்பை நடத்தியுள்ளது. 90 வீதமானவர்கள் அரசாங்கத்தில் இருந்து விலக வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஜாதிக ஹெல உறுமய கட்டாயமாக அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் என ரத்ன தேரர் கூறியுள்ளார்.

தூய்மையான நாளை அமைப்பின் நிலைப்பாடும் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடும் இணையும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

அரசாங்கம் மக்களுக்காக செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்றால் அரசாங்கத்தை பாதுகாக்க வேண்டிய எவ்வித தேவையும் எமக்கில்லை எனவும் ரத்ன தேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டு பிழையாளி...

ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் திரும்பிச் செல்லப் போவதை தரவுகளுக்கூடாக பகிரங்கப்படுத்தியதன் பின்னர், முதலில் வட மாகாண சபைக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று கூறியவர்கள், இப்போது தாம் கணிசமான நிதியை செலவு செய்துவிட்டதாகவும், ஏனைய நிதியையும் இவ்வருட இறுதிக்குள் செலவு செய்யப்போவதாகவும் கூறுகின்றனர்.

இவ்வருடம் முடிவடைய இன்னும் ஒன்றரை மாதங்கள் இருக்கின்ற நிலையில் திட்டங்களைத் தயாரித்து, மதிப்பீடுகளைச் செய்து, ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்து பணியை ஆரம்பிப்பதற்கு சுமாராக இரண்டு மாதங்களாகலாம். எனவே பெருந்தொகை நிதி திறைசேரிக்குத் திரும்பிச் செல்லப்போவது உறுதியாகும்.

இந்த நிலையிலேயே திட்டங்களை தயாரித்துத் தமக்கு வழங்குமாறு சிவஞானம் கோரியிருப்பது தமது இயலாமைக்குள் மக்களையும் இழுத்துவிட்டு கூட்டுப் பிழையாளிகளாக்குவதற்கே கூட்டமைப்பினர் முயற்சிக்கின்றனர். தேசியத்தையும், தன்மானத்தையும் கூறி வாக்குகளை அபகரித்தவர்கள், இப்போது தமது முட்டாள்தனத்துக்குள் மக்களை இழுத்துவிடப் பார்க்கின்றார்கள் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து மூன்று தினங்களில் முடிவு

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இரகசிய பேச்சையோ ஒப்பந்தத்தையோ மேற்கொள்ளவில்லை. அடுத்த மூன்று தினங்களுக்குப் பின்னர் திறந்த மனதுடன் கட்சியின் முடிவுகளை மக்களிடம் பகிர்ந்துகொள்வோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ்.

கல்முனை ஷாகிராக் கல்லூரியின் ஸ்தாபக தினம், மற்றும் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு என்பன நேற்று நடைபெற்றன. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

முஸ்லிம் தேசியத்தின் அரசியல் பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட பாக்குப் போன்று மாற்றப்பட்டிருக்கிறது. குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் மீதான, முஸ்லிம் காங்கிரஸ் மீதான நெருக்குவாரம் கடந்த நான்கு வாரங்களாக அதிகரித்திருக்கிறது. பல உறுதி மொழிகள், செய்திகளை அரசு எமக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் மிகக் கடுமையான கஷ்டத்துக்குள்ளாகியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் நானும் ஒருவன்.

மக்களின் கோரிக்கைகளை புறந்தள்ளிவிட்டு அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டுமென்றால், நாம் இரகசியமாக அரசுடன் பேசியிருக்கலாம். தனிப்பட்ட பதவி, அந்தஸ்துகளை உயர்த்திக்கொண்டும் முடிவுகளை எடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறான தேவைகள் எமக்கில்லை. அடுத்த மூன்று தினங்களுக்குப் பின்னர் திறந்த மனதுடன் மக்களுடன் நாம் முடிவுகளைப் பகிர்ந்து கொள்வோம். தெற்கிலுள்ள முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கரிசனை கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

## இலங்கைக்கு வெள்ளையடிப்பு



இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற 5 ஆவது ஒரு நாள் போட்டியிலும் இந்திய அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரை முழுமையாக 5-0 என்ற ரீதியில் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 286 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 139 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் குல்கர்னி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலளித்து ஆடிய இந்திய அணி 48.4 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 288 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் கோலி ஆட்டமிழக்காமல் 139 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மென்டிஸ் 4 விக்கெட்டுக்களை சாய்த்தார். போட்டியின் ஆட்டநாயகனாக மத்தியூஸ் தெரிவானார்.

தொடர் நாயகனாக கோலி தெரிவானார்.

# அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நவம்பர் முதல் இடைக்காலக் கொடுப்பனவு

2015 வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் அதிகரிக்கப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவு 3,000 ரூபாவை இம்மாத சம்பளத்துடன் பெறவுள்ளனர். இதற்கான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் பீ.பி. அபேகோனினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணங்களின் பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சம்பள ஏற்றங்கள் புதிய சம்பளக் கட்டமைப்பிற்குள் சேர்க்கப்படும் வரை அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் 3,000 ரூபாவும் ஓய்வூதியம் பெறுவோருக்கு 2, 500 ரூபாவும் நவம்பர் மாதம் முதல் வழங்கப்படும் என செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சம்பளக் கட்டமைப்புக்கு அமைவாக ஓய்வூதியங்களை மறுசீரமைத்து அதனை நடைமுறைப்படுத்தும் வரை ஓய்வூதியும் பெறுபவர்கள் அனைவருக்கும் இடைக்காலக் கொடுப்பனவு ரூபா 2,500 வழங்கப்படுவது அவசியமாகும் எனவும் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளில் தற்காலிக அடிப்படையில் அல்லது நாட் சம்பள அடிப்படையில் பணி புரிகின்றவர்களுக்கும் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தண்டப் பணம் செலுத்த வருகிறது புதிய திட்டம்

நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் போது வீதி ஒழுங்கை மீறும் குற்றங்களுக்கான தண்டப்பணத்தை சாரதிகள் இவ்வருட இறுதிக்கு முன்னரிலிருந்து அலைபேசி மூலமாக செலுத்த முடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தப் புது முறைமை பொலிஸாரினால் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அலைபேசிகளின் எந்த வலையமைப்பினூடாகவும் தண்டப்பணங்களைச் செலுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புளியங்குளத்தில் வாள் வெட்டு; குடும்பஸ்தர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, புளியங்குளம், பிள்ளையார் குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் மீது வாள் வெட்டுத்தாக்குதல் நடைபெற்றுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கந்தையா செல்வராசா என்ற குடும்பஸ்தரின் வீட்டினுள் புகுந்த சிலர் அவர் மீது சரமாரியாக வாளால் வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளனர் என்றும், படுகாயமடைந்தவர் புளியங்குளம் வைத்தியசாலையில் இருந்து நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

# உலக நாடுகளில் இலங்கை அபிவிருத்தியில் முன்னேற்றம்



## அமைச்சர் சரத் அமுனுகம பெருமிதம்

(கொழும்பு)

அபிவிருத்தியை பொறுத்தவரை உலக நாடுகளில் இலங்கை முன்னேற்றமடைந்த நாடாக மாறியுள்ளதாக சிரேஷ்ட அமைச்சரும், பிரதி நிதியமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்திய பொருளாதார மாநாட்டின் கீழ் நடைபெற்ற விவாதத்துடன் கூடிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பிறப்பு வீதம், தாய் மரண வீதம், ஆயுட்காலம் போன்றவற்றுடன் ஒப்பிடும் போது இலங்கை உலகில் முன்னேறிய நாடுகளைப் போன்ற நிலைமையில் உள்ளது.

இந்தியா டுடே சஞ்சிகையின் ஆசிரியர் சபை ஆலோசகர் ஷிகர் குப்தா வழி நடத்திய இந்த விவாத ரீதியான கலந்துரையாடலில் வர்த்தகர்களான சஞ்சிவ் மேத்தா, ஆதி கோத்ரேஜ், பிரபல நடிகை காஜல் தேவ்கன் மற்றும் சரத் அமுனுகம ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொது வேட்பாளராக போட்டியிடத் தயார்



### அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். எனது அரசியல் என்பது நாட்டின் தேவைகளை மையமாகக் கொண்டது. ஏனைய கட்சிகளும் மக்களும் பொது வேட்பாளராக நான் போட்டியிடவேண்டும் என விரும்பினால் அதற்கு நான் தயார் என அவர் குறிப்பிட்டார்.

நான் பொருத்தமான வேட்பாளர் என அவர்கள் நம்பிக்கை வெளியிட்டால், அவர்கள் வேண்டுகோள் விடுத்தால் நான் தயங்கமாட்டேன். நான் ஒருபோதும் பதவியை அல்லது வேறு எந்த சலுகையையும் எதிர்பார்த்து செயற்பட்டதில்லை, மாறாக நாட்டை அடிப்படையாகக் கொண்டு அதன் அடையாளத்தைக் காப்பாற்றவே செயற்பட்டிருக்கிறேன். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நாட்டைத் தவறான பாதையில் இட்டுச்செல்கின்றது, அதனால் இதனை மாற்ற வேண்டும் என்றார்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம் 19 இல் கைச்சாத்தாகும்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது, இணைந்து செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவது எதிர்வரும் 19ஆம் திகதி வரை தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானத்துக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் வண. மாதுலுவாவே சோபித்ததேரர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, இன்று கைச்சாத்திடப்படவிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இவ்வாறு 19ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

வண. மாதுலுவாவே சோபித்த தேரருடன் இணைந்து வேலை செய்ய தீர்மானித்துள்ள அரசியல் கட்சிகளும் குழுக்களும், இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வன்னி தேர்தல் மாவட்டத்தில் இரண்டரை இலட்சம் வாக்காளர்

(மன்னார்)

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களைக் கொண்ட வன்னி தேர்தல் மாவட்டத்தில் 2 இலட்சத்து 52 ஆயிரத்து 761 வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கும் தகைமை பெற்றுள்ளனர்.

2014 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி மன்னார் மாவட்டத்தில் 79 ஆயிரத்து 232 வாக்காளர்களும், வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து ஒன்பதுனாயிரத்து 689 வாக்காளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 63 ஆயிரத்து 840 வாக்காளர்களும் வாக்களிக்க தகைமை பெற்றுள்ளனர்.

## கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தில் கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் தனுசன் (வயது- 9) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான். நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன், நீர் அருந்துவதற்காக கிணற்றடிக்குச் சென்றபோது தவறி வீழ்ந்துள்ளார். சிறுவனை நீண்டநேரமாகக் காணாத உறவினர்கள், தேடியபோது சிறுவன் நீரில் மூழ்கியமை தெரிய வந்தது.

இது குறித்து தமக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அங்கு சென்று சடலத்தை மீட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.